FSJ
TOWARDS LIBERATION IN SOLIDARITY WITH THE OPPRESSED AND THE DOWNTRODDEN

# உறவே நீ பேசு

**புனித வளனாரின் பிரான்சிஸ்கு சபை**

மார்ச் 2025 உறவு 70




FSJ செய்தி மலர்

JUBILEE 2025
PILGRIMS OF HOPE

# அன்பு சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் நம்சபையின் பாதுகாவலர் தூய யோசேப்பின் திருநாள் வாழ்த்துகளை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன். மார்ச் மாதம் என்றாலே தவக்காலமும் யோசேப்பின் திருவிழாவும் இணைந்து திரு அவை கொண்டாடுகிறது. 2025 யூபிலி ஆண்டை எதிர் நோக்கின் ஆண்டாக சிறப்பித்துக் கொண்டு இருக்கும் இந்நாட்களில் நாமும் நமது துறவற வாழ்வில் எதிர் நோக்கும், நம்பிக்கையும், விசுவாசமும் நிறைந்தவர்களாக பயணிக்க அருள்தேடுவோம். இறை அருளை, இறை நம்பிக்கையை, இறை பராமரிப்பை உணர்த்தும் சிறு நிகழ்வு இதோ.

கப்பல் ஒன்று கடலில் வழி தவறி செல்லும் போது, பெரும் புயலில் சிக்கி மூழ்கியது. அதில் இருந்த ஒருவன் மட்டும் எப்படியோ தப்பினான். அருகிலுள்ள தீவில் அவன் கரையேறினான்.

இறைவா! இங்கிருந்து எப்படியாவது என்னை தப்பிக்க வைத்து விடு என வேண்டினான். ஆள் அரவமற்ற இந்த தீவில் எத்தனை நாள் இருப்பேன்? என் மனைவி மக்களை பார்க்க வேண்டாமா? என்று கண்ணீர் விட்டு செபமும் செய்தான். எந்த உதவியும் அவனுக்கு கிடைக்கவில்லை. இப்படியே சில நாட்கள் ஓடின.



தன்னை காத்துக் கொள்ள, தீவில் கிடைத்த பொருட்கள், மற்றும் கப்பலின் உடைந்த பாகங்களை கொண்டு ஒரு சிறிய குடிசை ஒன்றை கட்டினான். அதில் கரை ஒதுங்கிய கப்பலில் இருந்த தனது பொருட்கள் சிலவற்றை மட்டும் பத்திரப்படுத்தி தங்கியும் வந்தான். இப்படியே சில நாட்கள் ஓடின...

இவன் பிரார்த்தனையை மட்டும் விடவே இல்லை. கடவுள் ஏதாவது ஒரு ரூபத்தில் நமக்கு நிச்சயம் உதவுவார் என்று தன்னை நம்பிக்கையோடு தேற்றிக் கொண்டான். ஒரு நாள் இவன் உணவு தேடுவதற்காக வெளியே சென்று விட்டு திரும்புகையில், அவன் கண்ட காட்சி அவனை திடுக்கிட வைத்தது. பட்ட காலிலே படும் என்பது போல எது நடக்கக் கூடாதோ அது நடந்து விட்டது. இவன் தங்குவதற்கென்று இருந்த ஒரே ஒரு குடிசையும், வானுயுற எழும்பிய புகையுடன் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. குடிசைக்குள் இருந்த உடைமைகள் அனைத்தும் தீக்கிரையாகியிருந்தன. அதை பார்த்த இவன் அலறித் துடித்தான். எல்லாமும் போய்விட்டது.

இறைவா! என்னை காப்பாற்றும் படி தானே உன்னை மன்றாடினேன். நீ என்னவென்றால் இருப்பவற்றையும் பறித்துக் கொண்டாயே இதுதான் உன் நீதியோ? என்று கதறி அழுகிறான். அப்போது ஒரு கப்பலின் பெரும் ஹாரன் சப்தம் இவனை எழுப்பியது. இவன் இருந்த தீவை நோக்கி அது வந்துக் கொண்டு இருந்தது. அப்பாடா நல்ல வேளை ஒரு வழியாக இங்கிருந்து தப்பித்தோம். யாரோ நம்மை காப்பாற்ற வருகிறார்கள் என்று உற்சாகத்தில் துள்ளி குதித்தான். கப்பல் சிப்பந்திகள் அவனை லைப் போட்டில் வந்து அழைத்துச் சென்றார்கள். தான் இங்கே தனியாக தீவில் மாட்டிக்கொண்டிருப்பது உங்களுக்கு எப்படிதெரியும்? என்று அவர்களிடம் கேட்டான்.

தீவில் ஏதோ பற்றி எரிந்து புகை எழும்பியதை பார்த்தோம் யாரோ தீவில் கரை ஒதுங்கி காப்பாற்ற வேண்டி சிக்னல் கொடுக்கிறார்கள் என்று நினைத்தோம் என்கிறார்கள் அவர்கள். அப்போது இவனுக்கு குடிசை எரிந்ததற்கான காரணம் புரிந்தது. இறைவனுக்கு நன்றி சொன்னான். அந்த வழியில் கப்பல்கள் பெரும்பாலும் வருவதே மிகமிக அரிதான நிலையில் குடிசை மட்டும் தீப்பிடித்து எரியவில்லை என்றால் தன் நிலை என்னவாகியிருக்கும் என்று அவனுக்கு அப்போது புரிந்தது. அவசரப்பட்டு இறைவனை நிந்தித்ததை நினைத்து வருத்தப்பட்டான்.

துறவற வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாமும் இப்படித்தான் இறைவனை அவசரப்பட்டு தவறாக எடைபோட்டு விடுகிறோம். ஒரு சிலநேரங்களில் நம்மை காக்கவே இறைவன் ஒவ்வொரு கணமும் காத்திருக்கிறார். அவர் தரும் சோதனைகள் அனைத்தும், நம்மை வேறொரு மிகப் பெரிய ஆபத்திலிருந்து காக்கவே என நேர்மறையாக சிந்தித்து ஏற்றுகொள்வோம். சோதனை மேல் சோதனை என்றால் இறைவனின் அருட்பார்வை நம் மீது விழுந்து விட்டது என்றே அர்த்தம். வெகு விரைவிலே நல்லது நடக்கும் என்று நம்புவோம். எதிர்நோக்கின் திருப்பயணிகளாக இறைநம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நமது துறவற வாழ்வு கூட பல நேரங்களில் விரக்தியுடனும் ஒருவித வெறுமையுடனும் வாழும் சூழல் ஏற்படுகிறது. இதற்கு அடிப்படை காரணம் உறவு சிக்கல் தான். நம்மோடு வாழ்கின்றவரை புரிந்து கொள்ளாமல், உண்மை தன்மை அலசி ஆராயாமல் அனுமான அடிப்படையில் நாமாக கற்பனை செய்து கொண்டு தீர்மானிப்பது மட்டுமே எடுத்துகாட்டுடன் சொல்கின்ற போது புரிதல் இலகுவாகும் என்பதால் இவற்றை இங்கே குறிப்பிடுகின்றேன்.

சில மாதங்களுக்கு முன்பு, ஒரு பள்ளியில் நடந்த ஆண்டு விழா நிகழ்ச்சிக்கு விருந்தினர் பேச்சாளராக என்னை அழைத்தார்கள்.

நான் அரங்கத்திற்குள் நுழைந்த போது எனக்கு தெரிந்த சில விருந்தினர்கள் ஓரிடத்தில் அமர்ந்து இருப்பதைக் கண்டேன். நான் அவர்களிடம் சென்று ஒருவருக்கு பின் ஒருவராக வரவேற்க ஆரம்பித்தேன்.

மூன்றாவதாக அமர்ந்திருந்த நபரை எனக்கு தெரியாது, நான் கையை நீட்டியபோது கைகொடுக்காமல் என்னை புறக்கணித்தார். என் எண்ணங்கள் அனைத்தும் “என்ன முட்டாள் தனம்?” என்று என்னை நானே கேட்டு மிக அவமானமாக உணர்ந்தேன். நான் அவரை மிகவும் இழிவாகப்பார்த்து மீதமுள்ள விருந்தினர்களை வரவேற்று ஒரு இருக்கையில் அமரச் சென்றேன்.

நான் உட்கார்ந்த பிறகும் கூட நான் இன்னும் வருத்தமாகவே இருந்தேன். அவர் மற்றவர்களிடம் எப்படி நடந்துகொள்கிறார் என்பதைப் பார்க்க நான் மறைமுகமாக அவரை கவனித்து கொண்டே இருந்தேன்.

பின்னர் தான் என் கவனத்தில் அதுபட்டது. அவர் பார்வையற்றவராக இருந்தார். அவரது கண்கள் திறந்திருந்தன, ஆனால் அவரால் பார்க்கவே முடியவில்லை. அவரை வரவேற்க வந்த மற்ற விருந்தினர்கள் முதலில் அவரைத் தொட்டுவிட்டு, பின்னர் அவருடன் கைகுலுக்க விரும்பினால் அவரது கையைப் பிடித்தனர். அப்படி செய்தால் சிரித்த முகத்தோடு கைகொடுக்கிறார்.

எனக்கு மிகவும் குற்ற உணர்வாக இருந்தது. மேடையில் இருந்த வரை அவரிடம் ஒரு வார்த்தை கூட என்னால் பேச முடியவில்லை. அந்த நிகழ்ச்சிக்கான எனது பேச்சு “மீட்பு” (Recovery) என்பதிலிருந்து “அனுமானத்தின் ஆபத்து” (The Danger of Assumption) என்று தலைப்பை மாற்றி பேசி அமர்ந்தேன். விழா முடிந்தவுடன் அவரிடம் சென்று வாழ்ந்து தெரிவித்தேன்.

அவர் எனது மறைமுகமான அபிமானியாக மாறிவிட்டார், அவர் எனது சொற்பொழிவுகளை மிகவும் பாராட்டினார். இந்த ஆண்டு விழா நிகழ்ச்சிக்கு நீங்கள் விருந்தினர் பேச்சாளராக வருகிறீர்கள் என்று எனது மனைவி சொன்னதால் உங்களோடு பேசவும், உங்கள் பேச்சை கேட்கவும் மட்டுமே இவ்விழாவிற்கு வந்தேன் என்று புரிப்போடு கூறியபடி எனது கைகளை இறுகப்பற்றி கொண்டார்.

இதை கேட்டதும் என் அவமானம் மூன்று மடங்காக அதிகரித்தது. நான் முட்டாள் தனமாக உணர்ந்தேன். ஆனால் இந்த முறை அவர்மீது அல்ல என்மீது கோபமாக உணர்ந்தேன்.

ஆம் சகோதரிகளே! அனுமானம் விஷம் போல கொல்லும். சரிபார்ப்பதற்குப் பதிலாக நாம் அனுமானிக்கிறோம். ஒருவர் நம் அழைப்புகளை எடுக்கவில்லை, என்றால் அவர்கள் நம்மைத் தவிர்க்கிறார்கள் என்று கருதுகிறோம். ஒருவர் நமக்கு பணம் கொடுக்கவில்லை, என்றால் அவர்கள் கஞ்சத்தனமானவர்கள் தீயவர்கள் என்று கருதுகிறோம், குழுமத்தில் நடக்கின்ற பிரச்சனைகள் குழப்பங்கள், மற்றும் புரிந்து ஏற்று கொள்ளாமைக்கு மிக முக்கிய காரணம் இந்த அனுமானம் தான். உண்மை சூழ்நிலையை புரிந்து கொள்ளாமல் நமது கற்பனை திறனால் தவறாக அனுமானம் செய்து கொண்டு உறவு அற்று போய்விட்டது என்று கருதுகிறோம், அவர்கள் சூழ்நிலையை புரிந்துக் கொள்ள நாம் ஒருபோதும் முயற்சிப்பது இல்லை. அடுத்தவரை அனுமானிப்பது எத்தகைய கொடூரமானது.

வாழ்க்கை பன்முகத்தன்மை கொண்டது. வாழ்க்கையின் பிரச்சினைகள் அனைவருக்கும் வேறுபட்டவை. நமக்கு பணம் தருவதாக உறுதியளித்த நபர் ஒரு நிதி நெருக்கடியை சந்தித்திருக்கலாம். நமது கைபேசி அழைப்பை எடுக்காத நபர் ஒரு கூட்டத்தில் இருந்திருக்கலாம் அல்லது பதிலளிக்க முடியாத அளவுக்கு பிஸியாக இருக்கலாம். சந்தேகத்தின் பலன் என்னவென்றால் மற்றவர்களுக்கு சாக்குப்போக்கு சொல்ல முடிகிறது. அனுமானத்தின் மீது சரிபார்ப்பு எதிர்வினையாற்றுவதற்கு முன் எப்போதும் நமது எண்ணங்களைச் சரிபார்க்க கற்றுகொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒருவர் நம்மை அவர்களின் திருமணத்திற்கு அழைக்கவில்லை, நாம் குறை சொல்ல விரும்புகிறோம், நமக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவில்லை குறை சொல்லவே விரும்புகிறோம், நமது whats app பதிவைப் படிக்கவில்லை குறை சொல்ல விரும்புகிறோம்.

நினைவில் கொள்ளுவோம். நாம் அறியாத துன்பங்கள் அனைவருக்கும் உள்ளன. நமக்கு உதவி தேவைப்படும் நபர்களுக்கும் எத்தனையோ தேவைகள் உள்ளன.சில நேரங்களில் பிறர் தங்கள் வாழ்க்கையிலும் போராட்டங்களிலும் சுழன்று கொண்டு இருப்பார்கள். எனவே குழும உறவில் உடன் வாழும் சகோதரிகளின் சூழ்நிலையை புரிந்து அன்பு செய்ய முற்பட்டால் ஏமாற்றத்தை நிர்வகிக்கவும் உறவுகளைப் பராமரிக்கவும் முனைப்புடன் ஈடுபட முடியும். தேவையற்ற வெறுப்புகளை கடந்து தேவைப்படக்கூடிய நட்பைப் பேணுவோம்.குற்றங்களுக்கு மேலே வளரவும் எதிர்மறை உணர்வுகளை வெறுக்கவும் கற்றுக் கொள்ளுவோம்.

இயந்திரதனமான பழக்கவழக்கமாக எத்தனையோ செயல்களை ஏன்? எதற்கு? என்று தெரியாமலே செய்து கொண்டிருக்கின்றோம். அவற்றுக்குள் தவக்காலமும் அடங்கும். இந்த தவக்காலம் முதலில் நமக்குச் சொல்லித் தருவது நம்முடைய எதிர்மறை வாழ்க்கையை விட்டு விட்டு மனம் திரும்ப வேண்டும் எனும் முடிவை எடுப்பது தான்.

இயேசுவின் வாழ்க்கை நமக்கு இதைதான் சொல்லித் தருகிறது. நமது பாவங்களுக்காக அவர் உயிரை விட்டார். நாமோ தொடர்ந்து பாவம் செய்கிறோம். தண்டனைக்கான நியாயத் தீர்ப்பு நாளை நாம் மறந்தே போய்விடுகிறோம்.

அதை நினைவில் கொள்வதற்கான அழைப்பாக நாம் இந்த தவக்காலத்தை மனதில் கொள்ளலாம். நமக்கு நன்றாகத் தெரிந்த பாவங்களிலிருந்து விடுதலை பெற முதலில் இறைவனின் உதவியை நாட வேண்டும். பகை, வெறுப்பு, பழித்துரைத்தல், பொறாமை, சிற்றின்பம், கோபம் போன்ற பாவங்கள் இயேசு நேரடியாகவே கண்டித்தவை.

நமது குழும உறவில் சகோதரிகளின் பெயரை அநியாயமாக கெடுப்பதில் இவை அத்தனையும் அடங்கிவிடுகிறது. இன்றைய சூழலில் துறவிகளாகிய நாம் தவறு செய்வதை விட அதை ஏற்றுக் கொண்டு மாறுகின்ற மனநிலைக்கு நமது மனசாட்சியை பழக்கப்படுத்தாமல் நியாயப்படுத்தி நல்லவர்கள் என நிரூபிப்பதிலே நமது பெரும்பான்மையான நேரத்தை செலவிடுகிறோம்.

அவற்றிலிருந்து வெளியே வரும்போது நம்மிடமிருக்கும் அடுத்த நிலை பாவங்கள் தெறியத் துவங்கும். அதையும் விட்டு விட வேண்டும்.

இப்படி படிப்படியாக ஒவ்வொரு பாவமாக விட்டுவிடும் போது நாம் இயேசு வாழ்ந்த வாழ்க்கையை நோக்கி நகர்கிறோம் என்று பொருள். இயங்காமல் இருக்கும் காஸ்ட்லி காரை விட ஓடிக்கொண்டிருக்கும் மாட்டு வண்டியே மேலானது! ஒவ்வொரு படியாக, ஒவ்வொரு பாவமாக நாம் விட்டுவிடுதலே புனிதத்தை நோக்கிய வாழ்க்கையின் முதல்படி.

புனிதத்தை நோக்கி நகரும் காலமாக இந்த தவநாட்களைப் பயன்படுத்த முயற்சி எடுப்போம்.

என்றும் பிரான்சீசிய உறவில்
சகோ. **எம். ஆரோக்கியம்** வ.பி.ச.
சபைத் தலைமைச்சகோதரி

SUPERIOR GENERAL
FRANCISCAN SISTERS
OF ST. JOSEPH

FSJ Generalate, Bishop John Aelen Illam, Magazine Road, St. Thomas Mount, Chennai - 600 016. Tamilnadu.
Phone : 2231 2876, 2234 1510  E-mail : fsjaelen1887@gmail.com

# SUPERIOR GENERAL PROGRAMME

## MARCH 2025

| | | |
|---|---|---|
| 01.03.2025 | - | Ennore & Sembarambakkam Visit |
| 02.03.2025 | - | General Council Meeting |
| 03.03.2025 | - | Maraimalai Nagar Hostel Visit |
| 05.03.2025 | - | Ash Wednesday |
| 07.03.2025 | - | Way of the Cross - Village Visit |
| 09.03.2025 | - | Province Questionnaire – Phase I – Discussion<br>Womens' Day Function |
| 10.03.2025 - 13.03.2025 | - | FSJ Constitution Work |
| 14.03.2025 | - | Way of the Cross - Village Visit |
| 15.03.2025 | - | St. Louis Convent - Monthly Recollection |
| 16.03.2025 | - | St. Joseph's Province Day Celebration<br>Province Questionnaire - Phase 2 - Discussion |
| 20.03.2025 - 22.03.2025 | - | Provincials Meeting<br>Way of the Cross - Village Visit |
| 23.03.2025 | - | Province Questioniare – Phase 3 - Discussion |
| 24.03.2025 - 25.03.2025 | - | Provincials Meeting |
| 26.03.2025 | - | Quasqui Residence- Monthly Recollection |
| 29.03.2025 | - | Way of the Cross - Village Visit |
| 30.03.2025 | - | Province  Questioniare - Phase 4 – Discussion |

**01.02.2025** - The newly built toilet building of Immaculate Heart of Mary Hr. Sec. School, Avadi, with 42 rest-rooms, was blessed and inaugurated in a ceremonial celebration. Mother General Sr. M. Arockiam, along with Sr. Stella Mary, Provincial Superior, and a group of esteemed dignitaries including a number of priests and sisters graced the occasion. The ceremonial opening was conducted by our Mother General, followed by a prayer and blessing by Fr. Praveen, Rector, Mylaimatha Spirituality Seminary, Poonamallee.

A thanksgiving Eucharist was meaningfully concelebrated, followed by cultural performances and a short program, during which a record was set for serving 60 varieties of food to 3,500 students in 40 minutes. This achievement, under the guidance of Mr. Ravi Chandran, District Governor of the Lions Club, was recorded in the RABARD Book of World Records." The initiatives and the dedicated efforts of Sr. Mercy Fatima, The headmistress of IHM, Avadi is commendable.

*****

**02.02.2025** - Mother General participated in the Consecrated Day Celebration organized by TNCRI. about 90 of our sisters actively took part in the program by joining the initiative to plant 1,000 trees and participating in a rally aimed at raising environmental awareness.

*****

**06.02.2025** - Mother General participated in the blessing ceremony of the Bon Secours Generalate, joining in the prayers and celebrations.

*****

**09.02.2025 & 17.02.2025** - Mother General organized a meeting for the Provincials and council members at the Generalate respectively. The main agenda of the meeting was about the forthcoming provincial elections and its preparation.

**11.02.2025 -** Mother General participated as the chief guest in the Founder's Day Celebration of Bishop John Aelen Province, Trichy. The solemn concelebrated Eucharistic Thanksgiving Mass was meaningful. Following the Mass, a formal gathering was held at the Provincial House auditorium, highlighting cultural performances. The sisters were felicitated with gifts. Later, Mother General conducted a half-day seminar for the superiors of the province, focussing on their responsibilities and matters related to the communities. The day concluded with a fellowship dinner.

*****

**15.02.2025** - The joyous Golden and Silver Jubilee Eucharistic celebration of the 9 golden and 12 silver jubilarians was concelebrated by the Most Rev. Dr. T. Sagayaraj, Bishop of Thanjavur along with about 70 priests making the occasion deeply meaningful. A good number of religious, parents, families and friends graced the celebration, adding to its solemnity and joy. The event concluded with a grand lunch.

# FROM THE GENERALATE

**FEBRUARY 2025**

**20.02.2025** - Mother General Sr. M. Arockiam, along with Mr. Jac Braat, Chairman of the Thomas Foundation, Sr. P. Arul Mary, General Councilor and Sr. Velankanni Sherin, Provincial Superior of Bishop John Aelen Province, participated in the blessing ceremony of the renovated St. James Matriculation School building in Srivaikuntam. Rev. Fr. Flavian, Parish Priest of St. James Church, blessed the building, and Mr. Jac Braat inaugurated it. The ceremony was followed by cultural programs, with sisters from neighbouring communities gracing the occasion.

*****

**21.02.2025** - St. Joseph's Arts and Science College for Women celebrated the inauguration of its new lift, marking a significant milestone in the college's journey. The event was graced by our Mother General, Sr. M. Arockiam, Mr. Jac Braat, Chairman of the Thomas Foundation, Netherlands, Rev. Sr. Arul Mary, General Councilor and Rev. Fr. Jeya Sheelan, Parish Priest. Sisters from neighboring communities were also present.

Mr. Jac Braat officially inaugurated the lift by cutting the ribbon, followed by a special blessing from Rev. Fr. Jeya Sheelan. Mother General Sr. Arockiam operated the lift for the first time. The celebration concluded with cultural programs and a special tribute and prayer dedicated to Erwin Braat and Mrs. Els Braat, the son and wife of Mr. Jac Braat.

*****

**22.02.2025** - Our Mother General Sr. M.Arockiam participated in the Second Graduation Day of St. Joseph's Arts and Science College for Women, Singampunari. Rev. Sr. Dr. Margaret Bastin, College Secretary, presided over the celebration. The Principal, Rev. Sr. Dr. Mincy Varghese, welcomed the gathering and presented the college's activity report. The chief guest, Mr. Issac Mohanlal, Senior Advocate, High Court of Madras and President of MMBA, delivered the convocation address and conferred degrees upon the graduates. He emphasized the importance of leading a courageous life and serving society.

The special guest, Dr. Sivakumar, Dean of CDC, Alagappa University, Karaikudi, officially authorized the graduates. Mr. Arul Jayakumar, Founder of GRIT Foundation, Sivagangai, and Mr. Jac Braat, Founder of the Thomas Foundation, Netherlands, graced the occasion as guests of honor. Rev. Mother Arockiam, Superior General and the College President, blessed and felicitated the graduates.

**Sr. Shaila FSJ**
General Secretary

# ST. JOSEPH PROVINCE

FSJ Provincialate, Assisi Bhavan, Uthamanallur Village,
Acharapakkam - 603 301. Kanchipuram Dist.

## PROVINCIAL SUPERIOR PROGRAMME

### MARCH 2025

| | | |
|---|---|---|
| 03.03.2025 | - | Srikalahastri Community Visitation |
| 04.03.2025 | - | Pulicat Community Visitation |
| 06.03.2025 | - | Walajabad Community Visitation |
| 07.03.2025 | - | Valan Illam Community Visitation |
| 08.03.2025 | - | Women's Day Celebration at Malavan Karanai, Vandavasi |
| 09.03.2025 | - | Province Chapter - Discussion-Phase I |
| 11.03.2025 | - | Kamalapuram Community Visitation |
| 13.03.2025 | - | Province Council Meet |
| 15.03.2025 | - | Province Chapter- Discussion-Phase II |
| 16.03.2025 | - | Province day Celebration & Inauguration of Mental Ill Home, Acharapakkam |
| 18.03.2025 | - | Portiuncula Community Visitation |
| 19.03.2025 | - | St. Joseph's Feast |
| 20.03.2025 - 25.03.2025 | - | Meeting at Generalate |
| 25.03.2025 | - | Poonamallee Community Visitation |
| 29.03.2025 | - | Avadi Convent Blessing Province Recollection Day |
| 30.03.2025 | - | Province Chapter - Discussion-Phase IV |
| 31.03.2025 | - | Acharapakkam Community Visitation |

*That They all May be One. Jn 17:21*

# BISHOP JOHN AELEN PROVINCE

FSJ Provincialate, 63/1, 2nd Street, Alpha Nagar, Karumandapam, Trichy - 620 001.
Mobile: 94861 59689 / E-mail: tryprofsj@yahoo.com

## PROVINCIAL SUPERIOR PROGRAMME

### MARCH 2025

| | | |
|---|---|---|
| 03.03.2025 - 04.03.2025 | - | Desk Work FSJ Provincialate |
| 05.03.2025 | - | Thuraiyur,<br>St. Francis of Assisi Convent Visitation |
| 06.03.2025 | - | Perumalpalayam,<br>St. Francis of Assisi Convent Visitation. |
| 07.03.2025 | - | Pillavidanthai St.Joseph's Convent and Don Bosco Home Visitation, Okkur, Assisi Illam Visitation |
| 08.03.2025 | - | FN - Women's Day Celebration at Marianathapuram<br>AN - Annual Day Celebration at Francis Assisi Matriv School, Chinnamanur. |
| 10.03.2025 - 12.03.2025 | - | Desk Work FSJ Provincialate |
| 13.03.2025 | - | Thiruvandurai<br>St. Paul's Convent Visitation |
| 14.03.2025 - 18.05.2025 | - | Desk Work FSJ Provincialate |
| 19.03.2025 | - | Chinnamanur St. Francis of Assisi Convent Visitation |
| 20.03.2025 - 25.03.2025 | - | Meeting Mother General,<br>FSJ Generalate |
| 26.03.2025 - 31.03.2025 | - | Desk Work FSJ Provincialate |

ST. FRANCIS OF ASSISI PROVINCE
FSJ Provincialate, Assisi Bhavan, Dharera P.O. Etmadpur, Agra Dt - 283 202. U.P.
Phone: 073516 78464 / Email: provincialatefsj@gmail.com

# PROVINCIAL SUPERIOR PROGRAMME

## MARCH 2025

| | | |
|---|---|---|
| 01.03.2025 - 05.03.2025 | - | Province Chapter Preparatory Work |
| 06.03.2025 | - | One Day Outing - Visit Taj Mahal |
| 09.03.2025 | - | Chapter Questionnaire Discussion Group - I |
| 11.03.2025 - 14.03.2025 | - | Community Visitation |
| 16.03.2025 | - | Chapter Questionnaire Discussion Group - II |
| 17.03.2025 | - | Visit Mother Theresa Old Age Home (Pre-Novices) |
| 19.03.2025 - 25.03.2025 | - | Meeting at Generalate |
| 27.03.2025 | - | Thanksgiving Mass Pre-Novices |
| 28.03.2025 | - | Farewell Gathering with Fathers |
| 29.03.2025 | - | Pre-Novices, Departing to Chennai |
| 30.03.2025 | - | Chapter Questionnaire Group - IV |



Message of his Holiness
POPE FRANCIS

# LET US JOURNEY TOGETHER IN HOPE

MARCH 2025

Dear brothers and sisters,

We begin our annual pilgrimage of Lent in faith and hope with the penitential rite of the imposition of ashes. The Church, our mother and teacher, invites us to open our hearts to God's grace, so that we can celebrate with great joy the paschal victory of Christ the Lord over sin and death, which led Saint Paul to exclaim: "Death has been swallowed up in victory. Where, O death, is your victory? Where, O death, is your sting?" (1 Cor15:54-55). Indeed, Jesus Christ, crucified and risen, is the heart of our faith and the pledge of our hope in the Father's great promise, already fulfilled in his beloved Son: life eternal (cf.Jn10:28; 17:3).[1]

This Lent, as we share in the grace of the Jubilee Year, I would like to propose a few reflections on what it means to journey together in hope, and on the summons to conversion that God in his mercy addresses to all of us, as individuals and as a community.

First of all, to journey. The Jubilee motto, "Pilgrims of Hope", evokes the lengthy journey of the people of Israel to the Promised Land, as recounted in the Book of Exodus. This arduous path from slavery to freedom was willed and guided by the Lord, who loves his people and remains ever faithful to them. It is hard to think of the biblical exodus without also thinking of those of our brothers and sisters who in our own day are fleeing situations of misery and violence in search of a better life for themselves and their loved ones. A first call to conversion thus comes from the realization that all of us are pilgrims in this life; each of us is invited to stop and ask how our lives reflect this fact. Am I really on a journey, or am I standing still, not moving, either immobilized by fear and hopelessness or reluctant to move out of my comfort zone? Am I

seeking ways to leave behind the occasions of sin and situations that degrade my dignity? It would be a good Lenten exercise for us to compare our daily life with that of some migrant or foreigner, to learn how to sympathize with their experiences and in this way discover what God is asking of us so that we can better advance on our journey to the house of the Father. This would be a good "examination of conscience" for all of us wayfarers.

Second, to journey together. The Church is called to walk together, to be synoda[2]Christians are called to walk at the side of others, and never as lone travellers. The Holy Spirit impels us not to remain self-absorbed, but to leave ourselves behind and keep walking towards God and our brothers and sisters.[3]Journeying together means consolidating the unity grounded in our common dignity as children of God (cf.Gal3:26-28). It means walking side-by-side, without shoving or stepping on others, without envy or hypocrisy, without letting anyone be left behind or excluded. Let us all walk in the same direction, tending towards the same goal, attentive to one another in love and patience.

This Lent, God is asking us to examine whether in our lives, in our families, in the places where we work and spend our time, we are capable of walking together with others, listening to them, resisting the temptation to become self-absorbed and to think only of our own needs. Let us ask ourselves in the presence of the Lord whether, as bishops, priests, consecrated persons and laity in the service of the Kingdom of God, we cooperate with others. Whether we show ourselves welcoming, with concrete gestures, to those both near and far. Whether we make others feel a part of the community or keep them at a distance.[4]This, then, is a second call to conversion: a summons to synodality.

Third, let us journey together in hope, for we have been given a promise. May the hope that does not disappoint(cf.Rom5:5), the central message of the Jubilee,[5]be the focus of our Lenten journey towards the victory of Easter. As Pope Benedict XVI taught us in the Encyclical Spe Salvi, "the human being needs unconditional love. He needs the certainty which makes him say: 'neither death, nor life, nor angels, nor principalities, nor things present, nor things to come, nor powers, nor height, nor depth, nor anything else in all creation, will be able to separate us from the love of God in Christ Jesus our Lord' (Rom8:38-39)".[6]Christ, my hope, has risen![7]He lives and reigns in glory. Death

has been transformed into triumph, and the faith and great hope of Christians rests in this: the resurrection of Christ!

This, then, is the third call to conversion: a call to hope, to trust in God and his great promise of eternal life. Let us ask ourselves: Am I convinced that the Lord forgives my sins? Or do I act as if I can save myself? Do I long for salvation and call upon God's help to attain it? Do I concretely experience the hope that enables me to interpret the events of history and inspires in me a commitment to justice and fraternity, to care for our common home and in such a way that no one feels excluded?

Sisters and brothers, thanks to God's love in Jesus Christ, we are sustained in the hope that does not disappoint (cf.Rom5:5). Hope is the "sure and steadfast anchor of the soul".[8]It moves the Church to pray for "everyone to be saved" (1 Tim2:4) and to look forward to her being united with Christ, her bridegroom, in the glory of heaven. This was the prayer of Saint Teresa of Avila: "Hope, O my soul, hope. You know neither the day nor the hour. Watch carefully, for everything passes quickly, even though your impatience makes doubtful what is certain, and turns a very short time into a long one" (The Exclamations of the Soul to God, 15:3).[9]

May the Virgin Mary, Mother of Hope, intercede for us and accompany us on our Lenten journey.

**- Pope Francis**




## Pope Francis' Monthly Intention

***For FAMILIES IN CRISIS***

**Let us pray that broken families might discover the cure for their wounds through forgiveness, rediscovering each other's gifts, even in their differences.**

# VOCATIONAL COMMISSION



1. 16.02.2025 அன்று ஆதாம்பாக்கம் St. Joseph's இல்லம் குழுமத்தில், நமது சபை அளவில் தமது துறவற வாழ்வின் பொன்விழாவை கொண்டாடிய அருட்சகோதரி. S. ELIZABETH MARY SAVERI அவர்களுக்கு, எம் குழும அருட்சகோதரிகள் இணைந்து பங்குதத் தந்தையின் ஒத்துழைப்புடன் பங்கின் பணித்தள மக்களோடு ஒன்றிணைந்து புனித மாற்கு ஆலயத்தில் நன்றித் திருப்பலி நிறைவேற்றி, இறைமக்கள் மத்தியில் இறை அழைத்தலின் மேன்மையை எடுத்துக்கூறி இறை அழைத்தலின் புனித நிலைக்கு சான்று பகர்ந்தோம். பங்குத்தந்தையும் இறைமக்களுக்கு அழைத்தலுக்கான உற்சாகம் தந்தார். மேலும் நமது சபையின் நோக்கம், உள்ளுயிர், தனிவரம், பணிகள் இவற்றை அடையாளப்படுத்தி, அதற்கான நமது சபையின் விவரங்கள் உள்ளடங்கிய சிற்றெடுகளை (Pamphlets) இறைமக்களை குழும சகோதரிகள் சந்தித்து வழங்கி அவரவர் குடும்பத்தில் இறை அழைத்தலைப் பெற பெற்றோர் மற்றும் இளம் பிள்ளைகள் மனதில் விழிப்புணர்வை தந்தோம். இறைமக்களும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர்.

---



2. 2025 February 21, 22 ஆகிய இரண்டு நாட்கள் இறை அழைத்தலை மென்மேலும் ஊக்கப்படுத்தும் நிலையில் இரண்டு மூன்று முறை சந்தித்த அதே மாணவிகளையே பள்ளியிலும் தொடர்ந்து பள்ளியின் தலைமை ஆசிரியர் அருட்பணி. ராபர்ட் செல்வம் மற்றும் வழிகாட்டியாக உடன் பயணித்த ஆசிரியர் உதவியுடன் புறத்தாக்குடி, மாணிக்கபுரம் மற்றும் இருங்களூர் ஆகிய இடங்களில் மாணவிகளின் இல்லங்களிலும் பெற்றோர் மற்றும் அவரவர் பிள்ளைகளுடன் கலந்துரையாடிய பிறகு அவர்களின் அரசு பொதுத்தேர்விற்காக சிறப்பு பிரார்த்தனை செய்து மேலும் Special Tips for Exams என்று பல யுக்திகளை எல்லாம் தந்து உற்சாகப்படுத்தப்பட்டார்கள். பெற்றோரும் முழு ஒத்துழைப்பு தந்தார்கள் என்பது மகிழ்ச்சி. தொடர்ந்து இம்மாணவிகளுக்கு இறை அழைத்தல் கிடைத்திட, எல்லோரும் இறைவனிடம் ஜெபிப்போம்.

---

### 3. இறையழைத்தல் ஊக்குனர்களுக்கான பொதுக்குழு கூட்டம்



22.02.2025 முதல் 23.02.2025 புனித வேளாங்கன்னி திருத்தல தியான இல்லத்தில் மேதகு. ஆயர். அருள் செல்வன் ராயப்பர், சேலம் மறைமாவட்டம், அவர்களால் வழிநடத்தப்பட்டது. திருச்சி ஆயர் ஜான் ஆலன் மறை மாநில அருட்சகோதரிகள். சகோதரி. ஜான்சி, சகோ. அமல ராணி ஆகியோர் பங்கேற்றனர்.

**பகிரப்பட்ட கருத்துக்கள்:**

- ☞ தகுதி இல்லாதவர்களை அழைத்து, தகுதி படைத்தவர்களாக உருவாக்குவது தான் இறையழைத்தல்.
- ☞ இறையழைத்தல் என்பது மிக பெரிய கொடை.
- ☞ பீட சிறுமிகள், பாடகற்குழு, மறைக்கல்வி வகுப்பு, அன்பியங்கள், இவற்றின் மூலம், இறையழைத்தலுக்கான குழந்தைகளை குறிப்பாக ஆறாம் வகுப்பு முதல் தேர்ந்தொடுத்து அவர்களை இறை நம்பிக்கையை திருப்பலியில் அதிக ஆர்வத்தை தூண்டி எழுப்ப வேண்டும்.
- ☞ விழும்பு நிலையில் இருப்பவர்களை முதல் நிலையில் கொண்டு வருவது நமது சபையின் அழைப்பு முறையாக இருக்க வேண்டும்.
- ☞ யாருக்கு வாழ்வு இல்லையோ! அவர்களுக்கு நிறைய கொடுங்கள்! கொடுத்து கொண்டே இருங்கள்.
- ☞ நாம் பெற்ற கடவுள் அனுபவத்தை இளம் பெண்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
- ☞ குழுமத்தின் இல்லத் தலைவிகள் உடன் வாழும் சகோதரிகளே வழிநடத்துவது போன்றும், கல்வி நிறுவுனங்களில் பொறுபோற்று வழி நடத்து தலைமைச் சகோதரிகள் எவ்வாறு மாணாக்களை வழி நடத்துகிறார்களே! அவர்களுக்கு இறையழைத்தலுக்கான இளம் பெண்களை கண்காணிக்கவும், வழிநடத்தவும் அவர்களை தேர்ந்தெடுக்கவும், முக்கிய கடமை பட்டபவர்கள் என பல கருத்துக்கள் பகிரப்பட்டது.

Sr. **Christhu Rani, FSJ**
Vocation Commission Co-ordinator

---






உம் வாக்கு எம் வாழ்வாக என்ற மாத இதழில் தொடர்ந்து எழுதி
விருது பெற்ற **சகோரி. விக்டோரியா** அவர்களுக்கு
வாழ்த்துக்கள்

# FORMATION COMMISSION



We had a prayer service - Presentation of the Lord. Novices offered themselves and prayed for their Vocation.

Franciscan spirituality courses taken by Rev. Fr. Antony Raj Cap.

In order to celebrate Our Founder's day Novices had 3 days of Prayer Service. Founder's day Celebration Our Guiding Light Most Rev. John Aelen, Founder of our Congregation celebrated with Liturgy. The same day, to imbibe the true spirit of our founder Novices with Aspirants visited Founder's Cemetery in St. Mary Church, Broadway, Chennai also Have seen the first mission place of our founder - Vepery.

History of Religious life subject Taken by Fr. Joseph OSM. 20th Memorial day of Rev Fr. Vallogia, SDB Novices visited the cemetery and prayed. Rev. Sr. Agnes Santiagu fsj the Vocation promoter of our congregation met the novices and strengthened their precious Vocation.

---

## 2. PRE- NOVICES SEMINAR PROGRAM

| | | |
|---|---|---|
| Topic | : | "Group Dynamics and Community Building" |
| Date | : | 22nd January to 24th January |
| Place | : | Nav Sadhan Regional Pastoral Centre, Varanasi |
| Resource Person | : | Rev. Fr. Isidore D'Souza (Counselling, Psychology) Chancellor, Allahabad Diocese. |

Our Pre-Novices enjoyed learning the following: A sense of belonging, Decision making, participation in workshops, Service activities, Strong communal bonds, Encourage mutual support during challenging times, spiritual resilience, healthy group dynamics, open dialogue, Trust each other, knowing each other, Building a community creates space, collective learning, spiritual growth Empowering individuals to take an leadership role, how to write feedback in different ways, (eg)coin, SBI, DESC , blind fold activities, dances . Our pre-Novices are learned from this course a lot. They had written a assignment on this topic .

Sr. **Christhu Rani, FSJ**
Formation Commission Co-ordinator





# Golden

## JUBILEE CELEBRATION



**சகோ. ஜெசிந்தா**

பெற்றோர்:
**திரு. சிமியோன்**
**திருமதி. குழந்தை தெரசு**

உடன் பிறந்தோர்: **6 பேர்**

மறைமாவட்டம்:
**மதுரை உயர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **சங்கராபுரம்**

பணி: **நற்செய்திப்பணி**

பணித்தளம்:
**பாளையங்கோட்டை மறைமாவட்டம்**
**வெங்காடச்சலபுரம்**

விருது வாக்கு:
**ஏழைகளில் இறைவனைக் காண**

ஒன்பது ரத்தினங்களுள் முத்து இவர். இவை இயற்கை நீரில் வாழ்கின்ற முத்துசிப்பி என்ற கடல் உயிரினத்தில் இருந்து முத்து கிடைக்கிறது. சிறந்த கைவேலைப்பாடுகளால் பல ஏழை எளிய பெண்களுக்கு வேலை வாய்ப்பளித்து வாழ்வாதாரத்தை உயர்த்த துணைசெய்பவர். இல்லத்தின் பணிகளை முகமலர்ச்சியோடு செய்து இறைவனுக்கு புகழ் சேர்த்துக் கொண்டிருக்கும் அருட்சகோதரி ஜெசிந்தா அவர்களை முத்துக்களால் இன்முகத்தோடு வாழ்த்துகிறோம்.



**சகோ. நம்பிக்கை மேரி**

பெற்றோர்:
**திரு. ஆரோக்கியசாமி**
**திருமதி. ஆரோக்கிய மேரி**

உடன்பிறந்தோர்: **8 பேர்**

மறைமாவட்டம்:
**மதுரை உயர் மறை மாவட்டம்**

பிறப்பிடம்: **இராயப்பன்பட்டி**

பணி: **நலவாழ்வு பணி**

பணித்தளம்:
**திருச்சி மறைமாவட்டம்,**
**கிள்ளுகோட்டை**

விருதுவாக்கு:
**நல வாழ்வுப்பணியில் ஆர்வமாய் ஈடுபட**

நவரத்தினங்களுள் வைரம் இவர். இவை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலத்தில் புதைந்த மரங்கள் வெப்பத்தால் கரியாகி காலப்போக்கில் வைரமாக உருவாகின்றன. இயேசுவின் நலம் தரும் பணியினை நம்பிக்கையோடும் இன்முகத்தோடும் இனிதே ஆற்றி இயற்கை மருத்துவத்தை எளிமையாய் கற்பித்து நோயற்ற வாழ்வை பலருக்கும் வைரமாய் உறுதி செய்பவர். இல்லத்தலைமை சகோதரியாய் உடன் வாழ்பவர்களை வழிநடத்தி இறைவனுக்கு புகழ் சேர்க்கும் அருட்சகோதரி நம்பிக்கை மேரி அவர்களை வைர கற்களால் அன்புடன் வாழ்த்துகிறோம்.

# Golden
## JUBILEE CELEBRATION



### சகோ. நம்பிக்கை மேரி

பெற்றோர்:
**திரு. ஆரோக்கியசாமி**
**திருமதி. ஆரோக்கிய மேரி**

உடன்பிறந்தோர்: **8 பேர்**

மறைமாவட்டம்:
**மதுரை உயர் மறை மாவட்டம்**

பிறப்பிடம்: **இராயப்பன்பட்டி**

பணி: **நலவாழ்வு பணி**

பணித்தளம்: **திருச்சி மறைமாவட்டம், கிள்ளுகோட்டை**

விருதுவாக்கு: **நல வாழ்வுப்பணியில் ஆர்வமாய் ஈடுபட**

நவரத்தினங்களுள் வைரம் இவர். இவைபல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலத்தில் புதைந்த மரங்கள் வெப்பத்தால் கரியாகி காலப்போக்கில் வைரமாக உருவாகின்றன. இயேசுவின் நலம் தரும் பணியினை நம்பிக்கையோடும் இன்முகத்தோடும் இனிதே ஆற்றி இயற்கை மருத்துவத்தை எளிமையாய் கற்பித்து நோயற்ற வாழ்வை பலருக்கும் வைரமாய் உறுதி செய்பவர். இல்லத்தலைமை சகோதரியாய் உடன் வாழ்பவர்களை வழிநடத்தி இறைவனுக்கு புகழ் சேர்க்கும் அருட்சகோதரி நம்பிக்கை மேரி அவர்களை வைர கற்களால் அன்புடன் வாழ்த்துகிறோம்.



### சகோ. பிலோமினாள்

பெற்றோர்:
**திருவாளர். இருதயம்**
**திருமதி. ரோணிக்கம்**

உடன்பிறந்தோர்: **4 பேர்**

மறைமாவட்டம் : **திண்டுக்கல்**

பிறப்பிடம்: **வக்கம்பட்டி**

பணி: **செபத்திருத்தூது பணி**

பணித்தளம்:
**வேலூர் மறைமாவட்டம், வந்தவாசி**

விருதுவாக்கு:
**ஏழைப் பெண்களின் வாழ்வு மலர**

ரத்தினங்கள் ஒன்பதில் பவளம் இவர். இந்த பவளத்திற்கு கடல் தான் பிறப்பிடம். வெதுவெதுப்பான நீர்ப்பகுதியில் விளையும் பவளப்பூச்சி என்ற கடல்வாழ் உயிரினம் கூடு போன்று கட்டும் புற்றே பவளப்பாறை. தன் கல்விப் பணியால் வசதி வாய்ப்பின்றி தவித்த  இளம் தலைமுறையினரின் கல்விக் கண்களைத் திறந்தவர்.ஏழைப் பெண்களின் உள்ளத்தில் தன்னம்பிக்கை உணர்வை விதைத்தவர். பங்குத் தளங்களில் நற்செய்தி பணி புரிந்து கொண்டிருக்கும் அருட்சகோதரி பிலோமினாள் அவர்களை பவள கற்களால் அன்போடு வாழ்த்தி மகிழ்கிறோம்.

# Golden
## JUBILEE CELEBRATION



### சகோ. மரிய டெல்லி லில்லி

பெற்றோர்:
**திருவாளர். சந்தனம்**
**திருமதி. மரியா**

உடன் பிறந்தோர்: **2 பேர்**

மறைமாவட்டம்:
**கோட்டாறு மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **குமாரப்பெருமாள் விளை**

பணி: **செபத்திருத்தூது பணி**

பணித்தளம்:
**செங்கை மறைமாவட்டம்**
**புனித தோமையார் மலை**

விருதுவாக்கு: **ஏழைகளுக்கு உதவுதல்**

ஒன்பது ரத்தினங்களுள் கோமேதகம் இவர். நவரத்தினங்களில் மிகவும் விலை குறைந்தது. ஆனால் நகைகளின் பளபளப்பை கூட்டுவதால் உலக வர்த்தகத்தில் உயர்ந்து காணப்படுகிறது.

தனது தட்டச்சுக் கற்பித்தல் பணியால் உயர் கல்வி பெற வசதி வாய்ப்பில்லாமல் தவித்த எண்ணற்ற ஏழை எளிய மாணவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டி வாழ்வளித்தவர்.இசைக் கருவி மீட்டி இறைவனை புகழ்ந்து கொண்டிருக்கும் அருட்சகோதரி லில்லி அவர்களை கோமேதக கற்களால் மன நிறைவோடு வாழ்த்துகிறோம்.



### சகோ. வியாகுல மேரி

பெற்றோர்:
**திருவாளர். பாப்பு**
**திருமதி. ரீட்டா காஸியாமேரி**

உடன் பிறந்தோர்: **3 பேர்**

மறைமாவட்டம்: **கும்பகோணம்**

பிறப்பிடம்: **மலேசியா, பினாங்கு**

பணி: **நற்செய்திப் பணி**

பணித்தளம்:
**உதகை மறைமாவட்டம், குன்னூர்**

விருதுவாக்கு:
**இளம்பெண்கள் மற்றும் விதவைகள் விடுதலை பெற**

ரத்தினங்கள் ஒன்பதில் இவர் வைடூரியம். இதுபூமிக்கு அடியில் அழுத்தத்தில் இருக்கும் “லாவா” என்ற எரிமலை குழம்பு வெளியே வரும் போது வைடூரியம் கிடைக்கும். விளிம்பு நிலையில் உள்ள பெண்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டி தன்னம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து நடக்கவும் சுயமாக தொழில் செய்து முன்னேறவும் தமது கலைத்திறமையால் பெண்களுக்கு வழிகாட்டியவர். இல்லத்தலைமை பொறுப்பில் இல்லத்துப் பணிகளை விருப்பத்தோடும் கலையார்வத்தோடும் செய்து மகிழ்ந்து கொண்டிருக்கும் சகோதரி வியாகுல மேரி அவர்களை வைடூரிய கற்களால் அன்போடு நெஞ்சம் மகிழ வாழ்த்துகிறோம்.

# Golden
## JUBILEE CELEBRATION



### சகோ. எலிசபெத் மேரி

பெற்றோர்:
**திரு. சவரி – திருமதி. அன்னமேரி**

உடன்பிறந்தோர்: **6 பேர்**

மறைமாவட்டம்:
**தஞ்சாவூர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **மயிலாடுதுறை**

பணி: **செபத்திருத்தூது பணி**

பணித்தளம்:
**சென்னை உயர்மறை மாவட்டம்**
**ஆதம்பாக்கம்**

விருதுவாக்கு:
**இறைவனோடு உறவாடுதல்**

நவரத்தினங்களுள் புஷ்பராகம் இவர். இக்கல்தேன் மஞ்சள் நிறத்தில் இருக்கும். பார்ப்பதற்கு தங்கம் போல் பிரகாசிக்கும். தனது எளிமையான அணுகுமுறையால் பல ஏழை எளிய குழந்தைகளுக்கு கல்வி பணி மூலம் நல்வழிக்காட்டியவர். பணி ஓய்வு பெற்ற பிறகும் முழு நேர செபத் திருத்தூது பணியாற்றி செப அலைகளால் பலருக்கு இறைவனின் அருள் வரங்களை பரிசளித்து வரும் அருட்சகோதரி எலிசபெத் மேரி அவர்களை புஷ்பராகக்கற்களால் உளமகிழ்வுடன் வாழ்த்துகிறோம்.



### சகோ. ரெக்ஸிலின்

பெற்றோர்:
**திருவாளர். ஜோசப்**
**திருமதி. ஜோஸ்பின்**

உடன் பிறந்தோர்: **7 பேர்**

மறைமாவட்டம்: **கும்பகோணம்**

பிறப்பிடம்: **அரியலூர்**

பணி: **நலவாழ்வு பணி**

பணித்தளம்:
**திருச்சி மறைமாவட்டம்,**
**கிள்ளுகோட்டை**

விருதுவாக்கு:
**என் கடன் நலப்பணி செய்வதே**

நவரத்தினங்களுள் மரகதம் இவர். இந்த மரகத கல் பச்சைநிறத்தில் பளபளக்கும். சிறிய கல்கூட அதிக விலைமதிப்பு உடையது.

தனது நலவாழ்வு பணியால் ஏழை எளிய மக்களுக்கு இறைவனின் குணமளிக்கும் வல்லமையை வெளிப்படுத்தி கிராமப்புறங்களில் முழுமையாக தனது பணி வாழ்வை வாழ்ந்து காட்டியவர். தனது ஆன்மீகப் பணியால் இறையன்பின் தூதுவராக பணியாற்றிக் கொண்டிருக்கும் அருள் சகோதரி ரெக்ஸிலின் அவர்களை மரகத கற்களால் வாஞ்சையோடு வாழ்த்துகிறோம்.



## சகோ. எமிலி மேரி

பெற்றோர்:
**திருவாளர். துரைசாமி – திருமதி. இருதய மேரி**

உடன்பிறந்தோர் : **1 பேர்**

மறைமாவட்டம்: **கும்பகோணம் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **பெரம்பலூர்**

பணி: **செபத்திருத்தூது பணி**

பணித்தளம்: **செங்கை மறைமாவட்டம், தோமையார் மலை**

விருது வாக்கு: **இறை விருப்பம் நிறைவேற்ற**

ரத்தினங்கள் ஒன்பதில் இவர் மாணிக்கம். இது பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் கல். அன்பின் அடையாளமாக உள்ளதால் இதற்கு மவுசு அதிகம். கல்விப் பணியால் ஏழை எளிய மாணவர்களின் அறிவு கண்களைத் திறந்திட அயராது உழைத்தவர். பாடல்களால் இறைவனை போற்றி புகழ இனிய குரலுக்கு சொந்தக்காரர்.தனது செபத்திருத்தூது பணியால் எல்லோருக்கும் இறை ஆசீரை பெற்றுத் தந்து கொண்டிருக்கும் அருட்சகோதரி எமிலி மேரி அவர்களை மாணிக்ககற்களால்அன்போடு வாழ்த்துகிறோம்.



# Silver
# JUBILEE CELEBRATION



## சகோ. எஃபிபனி மேரி

பெற்றோர்:
**திருவாளர். செபஸ்தியான்**
**திருமதி. அமலோற்பவ மேரி**

உடன் பிறந்தோர்: **4 பேர்**

மறைமாவட்டம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **அரியலூர்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**வேலூர் மறைமாவட்டம், பிருதூர்**

விருதுவாக்கு:
**எல்லோரிலும் அன்பை விதைத்திட**

பாதுகாவலர்:
**திருத்தூதர் தூய யூதா ததேயு மருத்துவமனைகளுக்கு பாதுகாவலர்**

கல்வியின் வழி மாணவ செல்வங்களின் வாழ்வு மாறுபட்ட, பண்பட்ட வாழ்வாக மாற்ற துடிப்புடன் பணியாற்றி, வரலாற்று ஆசிரியையாக சிறப்பாக கற்பித்து நல்லதொரு சமூகத்தை உருவாக்க பணிபுரிந்துவரும் சகோதரி எபிபனி மேரி அவர்களை உளம் நிறை பாசத்தோடு வாழ்த்தி திருத்தூதர் தூய யூதா ததேயு அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.



## சகோ. அந்தோணியம்மாள்

இவரின் பெற்றோர்:
**திருவாளர். பெரியநாயகம்**
**திருமதி. அந்தோணியம்மாள்**

உடன் பிறந்தோர்: **5 பேர்**

மறைமாவட்டம்:
**வேலூர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **இளையாங்கண்ணி**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**வேலூர் மறைமாவட்டம், வந்தவாசி**

விருதுவாக்கு: **கொடையாகப் பெற்றதை கொடையாக வழங்கிட**

பாதுகாவலர்:
**திருத்தூதர் தூய பேதுரு. திருஅவையின் முதல் திருத்தந்தை. திருஅவையின் திறவுகோல்.**

இறையவனின் பணியை இனிதே ஆற்றிட கொடையாகப் பெற்ற கணித கல்வியை கொடையாக கொடுத்து மற்றவரின் உருவாக்கத்தில் அக்கறைக்கொண்டும், இசைக்கருவியை இனிதாய் மீட்டி இறைவனைப் புகழ்வதில் மகிழ்வும், மனநிறைவும் கொண்டும் ஆர்வமுடன் உழைத்து வரும் சகோதரி அந்தோணியம்மாள் அவர்களை உளமாற வாழ்த்தி திருத்தூதர் தூய பேதுரு அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.

# Silver
# JUBILEE CELEBRATION



**சகோ. மோட்ச ராக்கினி சாந்தி**

இவரின் பெற்றோர்:
**திருவாளர். சூசை கணேசன்**
**திருமதி. செசிலியா**

உடன் பிறந்தோர்: **7 பேர்**

மறைமாவட்டம்: **வேலூர் மறைமாவட்டம்**

பிறப்பிடம் : **ஓல்டு டவுன்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**பாளையங்கோட்டை மறைமாவட்டம், நெல்லை டவுன்**

விருதுவாக்கு:
**எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க**

பாதுகாவலர்:
**செபதேயுவின் மகனான தூய யாக்கோபு இவர் கால்நடை மருத்துவர்களின் பாதுகாவலர்.**

ஆண்டவனின் அருளால் இனிய குரலால் பாடியும் இசை கருவி மீட்டியும் இறை பணியை செய்து ஏழை எளியவரில் நற்செய்தியை அறிவிப்பவர். தலைமையாசிரியர்பொறுப்பில் ஆர்வமுடன் கல்விபணி ஆற்றி வரும் சகோதரி சாந்தி அவர்களை உளம் மகிழ்ந்து வாழ்த்தி திருத்தூதர் தூய யாக்கோபு அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.



**சகோ. சகாய மேரி வெண்ணிலா**

பெற்றோர்:
**திருவாளர். சவேரியார்**
**திருமதி. ஜோசப் மேரி**

உடன் பிறந்தோர்: **2 பேர்**

மறைமாவட்டம்:
**மதுரை உயர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **இராயப்பன்பட்டி**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**வேலூர் மறைமாவட்டம், ஜோலார்பேட்டை**

விருதுவாக்கு:
**நலிவுற்ற குழந்தைகளின் நலனுக்காக**

பாதுகாவலர்:
**திருத்தூதர் தூய சீமோன். மரம் வெட்டுவோரின் பாதுகாவலர்.**

நலிவுற்ற மக்களின் வாழ்வு முன்னேற்றம் காணவும், கல்வியால் மாணவ சமூகம் வளர்ந்திட உயர்ந்திட ஆர்வமுடன் தாய் தமிழை கற்பித்து குழந்தைகளின் நல்வாழ்வுக்காய் பணியாற்றி வரும் சகோதரி வெண்ணிலா அவர்களை உளமாற வாழ்த்தி திருத்தூதர் தூய சீமோன் அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.

# Silver

# JUBILEE CELEBRATION



## சகோ. வேளாங்கண்ணி ராணி அனிதா

இவரின் பெற்றோர்:
**திருவாளர். ஜேம்ஸ்**
**திருமதி. பாத்திமா மேரி**
உடன் பிறந்தோர்: **1 நபர்**
மறைமாவட்டம்: **உதகை மறைமாவட்டம்**
பிறப்பிடம்: **குன்னூர், ஆழ்வார்பேட்டை**
பணி: **கல்விப்பணி**
பணித்தளம்: **திண்டுக்கல் மறைமாவட்டம் மரியநாதபுரம்**
விருதுவாக்கு:
**விளிம்பு மக்களின் விடுதலைக்காக**
பாதுகாவலர்:
**திருத்தூதர் தூய அந்திரேயா இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் திருத்தூதர். எந்த தயக்கமும் இல்லாமல் உடனடியாக இயேசுவை பின் தொடர்ந்தார். மீனவருக்கு பாதுகாவலர்.**

கல்வி என்ற ஆயுதத்தால் நல்வாழ்வையும், வீரம், வலிமை நல் எண்ணம் போன்றவற்றை பாடல், நடனம், கவிதை என பல விதங்களில் மாணவ சமூகத்திற்கு எடுத்துரைத்து தலைமையாசிரியராக சிறப்புடன் செயல்படுபவர். திருச்சி ஆயர் ஆலன் மாநிலத்தின் ஆலோசக சகோதரியாக ஆர்வமுடன் பணியாற்றும் சகோதரி அனித்தா அவர்களை உளம் நிறை அன்போடு வாழ்த்திதூய அந்திரேயா அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.



## சகோ. எலிசபெத் ராணி

பெற்றோர்:
**திருவாளர். இருதயசாமி**
**திருமதி. சவரியம்மாள்**
உடன் பிறந்தோர்: **6 பேர்**
மறைமாவட்டம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**
பிறப்பிடம் : **விரகாலூர்**
பணி : **கல்விப்பணி**
பணித்தளம்:
**வேலூர் மறைமாவட்டம், வந்தவாசி**
விருதுவாக்கு: **கடவுளின் மாட்சிக்காக**
பாதுகாவலர்:
**இயேசுவின் அன்பு சீடர் தூய யோவான். எழுத்தாளர்கள் மற்றும் இறையியலாளர்களின் பாதுகாவலர் இவர்.**

மனித வாழ்வை வளப்படுத்தும் உயர்மிகு அறிவியல் கல்வியை பல்வேறு ஆராய்தலுக்கு உட்படுத்தி கற்பித்து இளம் உள்ளங்களை உருவாக்குவதிலும், இனிமையான அணுகுமுறையால் உறவை கட்டி எழுப்புவதிலும்இறை அனுபவத்தில் நாளும் வாழ்ந்திட பணி செய்துவரும் சகோதரி எலிசபெத் ராணி அவர்களை உளம் கனிந்து வாழ்த்திதிருத்தூதர் தூய யோவான் அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.

# Silver
# JUBILEE CELEBRATION



## சகோ. கரோலின் மேரி

பெற்றோர்:
**திருவாளர். மகிமை ராஜ்**
**திருமதி. பிலோமினாள்**
உடன் பிறந்தோர் : **2 பேர்**
மறைமாவட்டம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**
பிறப்பிடம்: **ஆலம்பாக்கம்**
பணி: **கல்விப்பணி**
பணித்தளம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**
**எளம்பலூர்**
விருதுவாக்கு:
**எளிமையில் இறையன்பு பணியாற்ற**
பாதுகாவலர்:
**திருத்தூதரான தூய தோமா. இந்திய கிறிஸ்துவ விசுவாசத்தின் வித்து. சிறந்த கட்டட கலைஞர்களுக்கு பாதுகாவலர்.**

கல்வி என்ற ஒளியை மாணவச் செல்வங்களுக்கு அளித்து, அவர்கள் அறிவாற்றலை பெற்றுகொள்ள ஞானமிக்க அறிவியல் கல்வியை இயற்கை வளத்தோடு சிறப்புடன் கற்பித்து, மக்களை ஆன்மீகப் பாதையில் உறுதிப்படுத்தி வரும் சகோதரி கரோலின் அவர்களை உளம் நிறைந்த வளத்தோடு வாழ்த்தி திருத்தூதர் தூய தோமா அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.



## சகோ. சந்தியாகு மேரி குளோரியா

பெற்றோர்:
**திருவாளர். சவரி நாதன்**
**திருமதி. சிசேலியா**
உடன் பிறந்தோர்: **3 பேர்**
மறைமாவட்டம்:
**சென்னை மயிலை உயர் மறைமாவட்டம்**
பிறப்பிடம்: **எண்ணூர்**
பணி: **கல்விப்பணி**
பணித்தளம்:
**திண்டுக்கல் மறைமாவட்டம்**
**வண்ணம்பட்டி**
விருதுவாக்கு:
**நம்பிக்கையோடு அனைத்தும் செய்ய**
பாதுகாவலர்:
**திருத்தூதரான தூய மத்தேயு.**
**வங்கி பணியாளர்களின் பாதுகாவலர்.**

மக்களோடு மக்களாக இணைந்து இந்த மானிட சமுகத்துக்கு கல்வி அறிவூட்ட, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் மூலம் திறம் பட மாணவ செல்வங்களுக்கு கற்பித்து இல்லத்தலைமை சகோதரியாக அறிவு, ஆன்மீகம் கலைத்திறன் என பல திறன்களை தன் பணி வழியாக கற்பித்துவரும் சகோதரி குளோரி அவர்களை உளம் நிறை உவப்போடு வாழ்த்தி திருத்தூதர் தூய மத்தேயு அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.

# Silver Jubilee Celebration



## சகோ. மேரி ஸ்டெல்லா

பெற்றோர்:
**திருவாளர். சிங்கராயர்**
**திருமதி. அமலோற்பவம்**

உடன் பிறந்தோர்: **5 பேர்**

மறைமாவட்டம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **வரதராஜன்பேட்டை**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**செங்கை மறைமாவட்டம் புனித தோமையார் மலை**

விருதுவாக்கு:
**இறை குரலுக்கு செவிமடுக்க**

பாதுகாவலர்:
**திருத்தூதர் அல்பேயுவின் மகனான தூய யாக்கோபு இறக்கும் நிலையில் இருப்போரின் பாதுகாவலர்.**

பணித்தளத்தில் கல்விப் பணி வழியாக குழந்தைகளோடு குழந்தையாக இணைந்து துடிப்புடனும், பொறுப்புடனும், விடாமுயற்சியுடனும் தலைமையாசிரியராக பொறுப்புடன் பணிசெய்து, உதவி தேவைப்படுவோர்களுக்கு ஓடிச் சென்று உதவும் மனம் கொண்ட சகோதரி மேரி ஸ்டெல்லா அவர்களை உளம் நிறைந்த அக்களிப்போடு வாழ்த்தி திருத்தூதர் தூய யாக்கோபு அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.



## சகோ. ஜெயராணி

பெற்றோர்:
**திருவாளர். அலெக்ஸான்டர்**
**திருமதி. மேரி ஸ்டெல்லா**

உடன் பிறந்தோர்: **2 பேர்**

மறைமாவட்டம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **புதுக்குப்பம்**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**வேலூர் மறைமாவட்டம், வந்தவாசி**

விருதுவாக்கு: **எல்லாம் உமக்காக**

பாதுகாவலர்:
**திருத்தூதரான தூய பிலிப்பு. நத்தனியேலை “வந்து பாரும்” என இயேசுவிடம் அழைத்தவர். செவிலியருக்கு பாதுகாவலர்.**

ஆண்டவனின் அருளால் அவரின் பணியை உலகில் ஆற்ற கல்வியை கருவியாய் கொண்டு ஆங்கிலப் புலமையை கருத்துடன் கற்பித்து சமத்துவ எண்ணத்துடன் அனைவரிடமும் அன்பை விதைத்து புத்துணர்வுடன் பணி செய்துவரும் சகோதரி ஜெயராணி அவர்களை உளம் மலர்ந்து வாழ்த்தி திருத்தூதர் தூய பிலிப்பு அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.

# Silver

# JUBILEE CELEBRATION



### சகோ. கிரேசி மேரி

பெற்றோர்:
**திருவாளர். சந்தன சாமி**
**திருமதி. ரோஸ் மேரி**

உடன் பிறந்தோர்: **5 பேர்**

மறைமாவட்டம்:
**கும்பகோணம் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **வரதராஜன்பேட்டை**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**உதகை மறைமாவட்டம், நகலூர்**

விருதுவாக்கு: **அமைதியின் கருவியாய்**

பாதுகாவல்:
**திருத்தூதர் தூய மத்தியா**
**தையல்காரர்களின் பாதுகாவலர்**

உலகை இயற்கை அழகால் போர்த்தியது போல் தையல் என்ற அழகிய கலையை மாணவ செல்வங்களுக்கு கற்பித்து பங்கு பணிகளில் ஆர்வமுடனும் ஆலயத்தை அலங்கரிப்பதில் கலைநயத்துடனும் மகிழ்வுடன் பணியாற்றும் சகோதரி கிரேசி மேரி அவர்களை உளம் நிறை உவப்புடன் வாழ்த்தி திருத்தூதர் தூய மத்தியா அவர்களின்பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.



### சகோ. ஆரோக்கிய மேரி

பெற்றோர்:
**திருவாளர். சூசைநாதன்**
**திருமதி. சகாயமேரி**

உடன் பிறந்தோர்: **2 பேர்**

மறைமாவட்டம்: **வேலூர் மறைமாவட்டம்**

பிறப்பிடம்: **ஜோலார்பேட்டை**

பணி: **கல்விப்பணி**

பணித்தளம்:
**மீரட் மறைமாவட்டம், சம்பல்**

விருதுவாக்கு:
**இணைந்து மிகுந்த கனி தர**

பாதுகாவலர்:
**திருத்தூதரான தூய பர்த்தலமேயு,**
**நரம்பியல் நோய்களுக்கு பாதுகாவலர்.**

கல்வியால் மாணவச் செல்வங்களின் வாழ்வை ஒளிர்விக்க தன் நிர்வாகத் திறமையால் தலைமையாசிரியை பணியை பொறுப்புடன் செய்து. தூய பிரான்சீசு மாநிலத்தின் மாநில ஆலோசகராக சிறப்புடன் பணியாற்றும் சகோதரி ஆரோக்கிய மேரி அவர்களை உளம் நிறை அன்புடன் வாழ்த்தி திருத்தூதர்தூய பர்த்தலமேயு அவர்களின் பாதுகாவலில் வாழ்த்துகிறோம்.

# Congratulations




**Annai Velanganni Nursery and Primary School, Singampuneri Students won the 1st 2nd and 3rd places in State Level Silambam**

## ST. JOSEPH'S MATRIC. HR. SEC. SCHOOL ENNORE



Bronze Medal in Silambam State Level



Silver Medal in Silambam State Level



Gold Medal in Silambam State Level



First Prize in State Level Karate



Second Prize in State Level Karate

## ST. MARK'S HIGH SCHOOL,

**Students have got 1st Prize & 2nd Prize in Silambam State Level Competition**





# EDUCATION COMMISSION

## 1. MATHS SEMINAR REPORT 2025







The Education Commission Secretary, Sr.Juliet Simiyon, organized a one-day Mathematics workshop on 08.02.2025 (Joy of Teaching and Learning Math) at Bishop John Aelen Province, Trichy.

The event was conducted by Mrs. Meena Suresh, a renowned expert in Maths Curriculum and Pedagogy from Chennai.

40 Mathematics Teachers from 8 schools participated in the Seminar. Which was hailded as "Mind - Blowing" by attendees. The teachers were highly enthusiastic and actively engaged throughout the workshop.

## 2. சிங்கம்புணரி செயிண்ட ஜோசப் கல்லூரி பட்டமளிப்பு விழா:




சிங்கம்புணரி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் 2வது ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்க்கு நம் சபை தலைமை அன்னை M. ஆரோக்கியம், கல்லூரி முதல்வர் சகோதரி. மின்சி வர்க்கீஸ், சிறப்பு விருந்தினராக அழகப்பா பல்கலைக்கழக பாடத்திட்ட மேம்பாட்டுத்துறை தலைவர் சிவக்குமார், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மோகன்லால் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 146 மாணவிகள் இளங்கலை பட்டமும், 10 மாணவிகள் முதுகலை பட்டமும் பெற்றனர். கணினி துறையில் பல்கலைக்கழக அளவில் முதலிடத்தையும், 51 மாணவிகள் தரவரிசை பட்டியலில் சிறப்பு தேர்ச்சி பெற்றனர். இதில் முன்னாள் கல்லூரி முதல்வர் மார்கரேட் மற்றும் பேராசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 3. ONE DAY SEMINAR FOR TEACHERS

Resource Person : Rev. Sr. Rita Michaal, Former General of FSJ.

Theme : Franciscan Sprituality and Bishop Johon Aelen, Input Session. On the sprit of the congregation

Date : 08.02.2025

A one day seminar was conducted at ASSISI Bhavan, P.T. Parru, For the teachers of our Institutions. The Session was graced by the presence of Sr. Clementia and Sr. Auxiliya along with 40 enthusiastic teachers, The Seminar aimed to Deepan the understanding of the Franciscan Spirituality and the contribution of our founder Bishop John Aelen to the congregation.

The Semiar Successfully Reinforced the Significance of Spiritual values in education and strengthened the teachers. dedication to their noble vocation.





## 4. THE LIFE AND LEGACY OF ST. FRANCIS OF ASSISI

The Seminar was conducted on 1st February 2025, in St. Joseph English Medium High School, Vegiwada. It was successfully hosted by Rev. Fr. Mathiyas OFM capuchin on the topic " The life and legacy of St. Francis of Assisi" Seminar was attended by teachers of the school. It was a great opportunity for our teachers to get inspiration and awareness about our Patron and also it was an enriching and motivating session for our staff .

---

## 5. ST. JOSEPH ENGLISH MEDIUM SCHOOL, VEGIWADA - VISIT



5. A Joyful Visit to St. Joseph English Medium School, Vegiwada on 25th February, 2025 the School was visited by Mr. Jac Braat, our loving benefactor and dear Rev. Sr. Arul Mary, our General Counsellor. It was a great and remarkable moment for the management, staff and students. He was welcomed by our students through their various activities. Mr. Jac was truly impressed and appreciated everyone.

---

## 6. SERVING 60 VARIETIES OF FOOD TO 3500 STUDENTS OF IHM SCHOOL, AVADI BY LIONS CLUB

The Lions Club, Avadi under the leadership of Mr. Ravi Chandran, District governor Conducted a short programme in which they created a record of serving 60 varieties of food to 3500 student in 40 minutes and thereby were placed in the RABARD Book of World Record . The participats of the Progromme were Mr. Ravi Chandran, District Governor, Mr. Dhanasekaran, Chair Person, Mr. Saravanan, Zonal President, Mr. Rahul Bohra, Avadi President, Mr. Elango, Secretary and Mr. Siva Kumar, Treasurer. Each of the dignitaries were duly honored by the School, and the programme came to a conclusion with the grand feast served by the Lion's Club.




---

## 7. LIFT OPENING CEREMONY



St. Joseph's Art & Science Collage for Women Celebrated the inauguration of its New lift on 21 Feb 2025 at 10.00 a.m. The event was a momentous occasion, making a significant milestone in the college's journey .

Rev. Sr. **Susai Mary, FSJ**
General Councilor, Education Co-Ordinator

# HEALTH COMMISSION

## 1. உலக நோயாளிகள் தினம்: சிறப்பு மருத்துவ முகாம்



a. 11.02.2025 அன்று காலை 10.00 மணியளவில் செபத்துடன் உலக நோயாளிகள் தின சிறப்பு மருத்துவ முகாம் புனித தோமையார் மருத்துவமனையில் மாலை 4.00 மணி வரை நடைபெற்றது. இம்முகாமில் மருத்துவமனையை சுற்றி வாழும் மக்கள் பயன் பெற்றனர். இதில் அனைத்து சிறப்பு மருத்துவர்களின் ஆலொசனை இலவசமாக வழங்கப்பட்டது. இலவச இரத்த பரிசோதனை, இலவச மருந்துகள், இலவச Sujok Therapy, இலவச மூன்று நாள் Physiotherapy மற்றும் Scan, ECG ஆகியவை தேவையில் இருப்போருக்கு வழங்கப்பட்து. இம்முகாமில் 200க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். இதற்கு முழு ஒத்துழைப்பை நல்கிய புனித தோமையார் மருத்துவமனை மருத்துவர்கள், மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் ஊர் தலைவர்கள் அனைவருக்கும் நன்றிகள். இதனை ஒருங்கிணைத்த புனித தோமையார் மருத்துவமனை நிர்வாக குழுவினருக்கு நன்றிகள்.

---

b. 11.02.2025 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை பூந்தமல்லி தந்தை வலோஜியா மருந்தகத்தில் இலவச மருத்துவ உதவி வழங்கப்பட்டது. இதில் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதனை மிகுந்த ஆர்வமுடன் சிறப்பாகச் செய்த அருட்சகோதரி. அமலி ரோஜா அவர்களுக்கு எங்களின் நன்றிகள்.



---

## 2. உலக நோயாளிகள் தின சிறப்பு திருப்பலி

11.02.2025 அன்று புனித வளனார் மாநிலம், ஆயர் ஜான் ஆலன் மாநிலம், பிரான்சிஸ் அசிசி மாநிலம் மற்றும் Under The Generalate இவற்றில் உலக நோயாளிகள் தினத்தை முன்னிட்டு நமது சபையின் மூலமாக இயங்கும் அனைத்து மருந்தகங்களிலும் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மருத்துவ சகோதரிகள் தாங்கள் வாழும் பகுதியில் நோயுற்றிருக்கும் மக்களை சந்தித்து அருட்சாதனங்கள் வழங்கி அவர்கள் நோயிலிருந்து விடுதலைப் பெற வழிகாட்டினர். இதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகள்.



## 3. CHAT MEETING:



03.02.2025 காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை Enlarged Catholic Health Association of Tamilnadu கூட்டம் திருச்சி எடமலைபட்டியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நம் சபையின் சார்பாக Sr. Sebastine (Health Commission Secretary) கலந்துக் கொண்டார்கள்.

குழந்தை பாக்கியத்திற்கான சிறப்பு சிகிச்சை முறையினை Sr. Mary Asirvatham, Canossa Congregation Sister அவர்கள் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

தமிழகத் திருச்சபையின் வளர்ச்சியில் மருத்துவத்துறை தொடர்ந்து ஆர்வத்துடன் செயல்பட ஊக்குவிக்கப்பட்டது.

---

## 4. தமிழ்நாடு அளவிலான மருத்துவ ஆய்வகங்களின் தர மேலாண்மை கருத்தமர்வு:

02.02.2025 அன்று காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தமிழ்நாடு அளவிலான மருத்துவ ஆய்வகங்களின் தர மேலாண்மை கருத்தமர்வானது Catholic Health Association of Tamilnadu (CHAT) அவர்களால் Leanard Multi Speciality hospital Batlagundu என்ற இடத்தில் நடைபெற்றது.

இக்கருத்தமர்வில் நம் சபையை சார்ந்த Sr. Mariyammal, மற்றும் Sr. S. Elizabeth Rani அவர்கள் பங்கேற்றனர்.

மருத்துவ ஆய்வகங்களின் தரத்தை உயர்த்த இன்னும் எவ்வளவு நன்றாகச் செய்ய வேண்டும் என்ற கருத்துகள் பகிரப்பட்டது. இதற்கு தேவையான பொருட்களை குறைந்த விலையில் எவ்வாறு வாங்குவது, மக்களை எப்படி நாடுவது என்ற கருத்துக்களும் பகிரப்பட்டது. ஆய்வக கருவிகளை எவ்வாறு நுணுக்கமாக பயன்படுத்த வேண்டும் என்று தெளிவாக கூறப்பட்டது.



## 5. ADVANCING EXCELLENCE IN CHEMOTHERAPY CARE:




04.02.2025 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை SHRINGERI SHARADA EQUITUS CANCER HOSPITAL-லில் Advancing Excellence in Chemotherapy Care பற்றிய ஒரு நாள் கருத்தமர்வானது நடைப்பெற்றது.

இக்கருத்தமர்வில் நம் சபையை சார்ந்த Sr. Indira அவர்களும் அவாகளோடு புனித தோமையார் மருத்துவமனையை சார்ந்த ஐந்து செவிலியர்களும் பங்கு பெற்றனர்.

இந்நிகழ்வின் மூலம் Cancer நோயாளிகளுக்கு வழங்கப்படும் Chemotherapy-யை இன்னும் எவ்வளவு நன்றாக செய்யலாம் அதற்கான மருந்து கலப்பு முறைகள், செய்முறைகள், நோயாளிகளிடம் பேசும் விதம் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை தேற்றும் விதம் மற்றும் புதுவித மருந்து கண்டுபிடிப்புகள் பற்றி தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Health Commission Co-ordinator

# COMMUNICATION COMMISSION

## 1. நிறுவுனர் தந்தையின் பொன் மொழிகள்

நம் நிறுவுனர் தந்தை ஜான் ஆலன் இறையுணர்வில் ஊன்றியவர், உழைப்பில் உயர்ந்தவர், எளிமையை விரும்பியவர் அனைத்துக்கும் மேலாக இறைவனிலும் மனிதரிலும், ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தவர். அவரை போல் நாமும் வாழ ஊக்கத்தோடும் உற்றாகத்தோடும் நாம் பணி செய்ய நம் நிறுவுனர் தந்தையின் பொன் மொழிகளை ஒவ்வொரு நாளும் தியானிக்க, சிந்திக்க அழகிய குறுஞ்செய்திகளை உருவாக்க உந்து சக்தியாக இருந்த Communication Commission சகோதரிகளுக்கு மனமார்ந்த நன்றிகள்.

---

## 2. Youtube நிகழ்வுகள்:

நம் சபையில் நடைபெறும் அனைத்து முக்கியமான நிகழ்வுகளுக்கு அனைவராலும் கலந்து கொள்ள முடிவதில்லை. எனவே நாம் இருக்கும் இடத்திலே இருந்து அனைத்திலும் கலந்து கொள்ள Live-Telecast செய்யப்படுகிறது. இவை நன்முறையில் அமைய உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் Communication Commission சார்பாக வாழ்த்துகளும், பாராட்டுகளும்.

YouTube Channel

**FSJ VIBES**

அனைவரும் இதனை பயன்படுத்த அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**Dr. Sr. Mary Jenova, FSJ**
Communication Commission Co-ordinator

# சமூக பணிக்குழு

## 1. நரிக்குரவர் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு போட்டிகள்



தலைமையகத்தில் கீழ் இயங்கி வரும் சமூக மையத்தின் வழியாக சபை நிறுவனர் தந்தை ஜான் ஆலன் தினத்தை முன்னிட்டு கோட்டூர்புரத்தில் உள்ள பெண்கள் மற்றும் சிறார்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு தூய்மையாக எவ்வாறு வாழ்வது என்பதை பற்றி பேசப்பட்டது. இந்நிகழ்வில் பெண்களுக்கு மணிக் கோர்த்தல் போட்டி நடத்தப்பட்டது. 15 பெண்கள் கலந்துக் கொண்டார்கள், சிறார்களுக்கு பல வகையான விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 30 சிறார்கள் கலந்துக் கொண்டு மகிழ்ந்தார்கள். மேலும் இவர்களுக்கு பழங்குடியினருக்கான சாதி சான்றிதழ் பெற வழி காட்டப்பட்டன.

## 2. சிறைப்பணி

செங்கல்பட்டு மறைமாவட்ட சிறையில் 117 நபர்களையும் மற்றும் மதராந்தக கிளை சிறையில் 19 நபர்களையும் சந்தித்தனர். இவர்களுக்கு ஆற்றுப்படுத்துதல், யோகா போன்ற கதைகள் சொல்லித் தரப்பட்டன. 24 நபர்களின் இல்லங்களை அலைப்பேசியின் மூலம் தொடர்பு கொண்டு சிறையில் வாடும் நிலைகளையும், அவர்களின் எதிர்பார்ப்புகளை பற்றி பேசப்பட்டன. 1 நபரை பெயிலில் எடுக்க முயற்சி செய்யப்பட்டன. சிறை வாசிகள் புத்தகங்கள் வாசிக்க ஊக்குவிக்கப்பட்டன. அவர்களுக்கு ரூபாய். 3000 மதிப்புள்ள புத்தகங்கள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டன. மேலும் மறை மாவட்ட அளவில் சிறைப்பணி கூடுகையில் சிறைப்பணி செய்யும் இரு சகோதரிகளுக்கு கலந்து கொண்டு மேலும் சிறைப்பணியை எவ்வாறு சிறப்பாக செய்யலாம் என கருத்து பகிர்வையும், எதிர் கால திட்டமாக தவக்காலத்தில் சிறையில் வாடுவோர்காக சிறப்பு செப வழிபாடுகள் செய்ய முயற்சி எடுக்க முடிவு செய்யப்பட்டன. மேலும் மாநில அளவிலான கூடுகைக்கு ஏற்பாடுகள் செய்வது பற்றியும் கலந்து ஆலோசிக்கப்பட்டன.

## 3. உலக நோயாளிகள் தினம்

09.02.2025 அன்று தெள்ளாறு Medical Officer மற்றும் அவர்களின் குழவினர் வந்து நமது வளனார் முதியோர்களை சந்தித்து மருத்துவ ஆலோசனை வழங்கினார்கள். மேலும் உலக நோயாளிகள் தினத்தை முன்னிட்டு 11.02.2025 அன்று எமது வளனார் முதியோர்கள் சகோதரிகள் இணைந்து வந்தவாசி அரசு மருத்துவமனையில் உள்ள 50 உட்புற நோயாளிகளை Chief Medical Officer. Dr. Shiva Priya அவர்களின் அனுமதியோடு சந்தித்து உணவு பொருட்களை வழங்கினோம்.





**Sr. Arul Mary**
*Social Work Commission, Co-ordinator*

# WOMEN AND FEMALE COMMISSION





1. 25.02.2025 மற்றும் 26.02.2025 இரண்டு நாட்கள் விஜயவாடா மற்றும் பி.டி.பாரு இடங்களில் உள்ள குழந்தைகள் காப்பகங்களை சபை ஆலோசகர் சகோதரி. அருள்மேரி பார்வையிட்டார்கள். பாவையின்போது இரண்டு காப்பங்களில் உள்ள இல்லத்த தலைவிகளும், குழந்தைகள் காப்பக பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். குழந்தைகளை தனியாக சந்தித்த போது குழந்தைகள் மகிழ்ச்சியாகவும், ஒழுக்கமாகவும் கல்வியில் சிறந்து விளங்குவதாகவும் கூறினார்கள். சந்திப்பின் போது மேன் மேலும் கல்வியில் சிறந்து விளங்க வலியுறுத்தப்பட்டது. அனைத்து பதிவேடுகளும், வரவு, செலவு கணக்குகளும் பார்வையிடப்பட்டது.

2. நம் சபை நிறுவுனர் தந்தை ஆயர் ஜான் ஆலனின் விண்ணக பிறப்பு விழா அனைத்து குழந்தைகள் காப்பகங்களிலும் திருப்பலி நிறைவேற்றி கலை நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு விதமான போட்டிகள் ஏற்பாடு செய்து மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.






3. பெருமாள்பாளையத்தில் உள்ள புனித அசிசி இல்ல காப்பக குழந்தைகள் மகிழ்விக்கும் விதமாகவும், அன்னை மரியின் மீது கொண்ட விசுவாசத்தை ஊக்குவிக்கும் விதமாக ஒருநாள் சுற்றுலா ஏற்பாடு செய்து வேளாங்கண்ணிக்கு அழைத்துச் சென்று குழந்தைகளை மகிழ்வித்தார்கள்.

**Sr. Arul Mary**
*Women & Female Commission, Co-ordinator*

Congratulations

**The 2024 recipient of the Musicologist Award.**
**She is a Vocalist, Veena Player, and academician who specializes in Tamil Music.**
**Congratulations**
**Rev. Sr. Dr. Margaret Bastin**





# இதுவே தகுந்த காலம்

இன்னல்களை கடப்பதும்
இடர்பாடுகளை இலகுவாக்குவதும்
இடக்கை செய்வது வலக்கைக்கு தெரியாமலிருப்பது
இதயத்தில் மாற்றம் காணுவதும்
இறையருளின் வல்லமை பெற
இதுவே தகுந்த காலம்.....

**வரலாற்றில் நோன்பு:**

புனித வெள்ளி, புனித சனி ஆகிய நாள்களில் கிறிஸ்தவர்கள் 40 மணிநேரம் நோன்பிருந்து துக்கம் கடைபிடித்தனர். இந்த நோன்பு பற்றி, புனித கிரனேயுஸ் தாம் எழுதியுள்ள குறிப்புகளில் எடுத்துரைத்துள்ள மூன்றாம் நூற்றாண்டிலும், இரண்டு நாள்கள் முழுமையாக நோன்பிருக்கும் வழக்கம் தொடர்ந்தது. உரோம் நகரத்து புனித ஹிப்போலித்துஸ் எழுதிய "திருத்தூது மரபு" என்ற நூல் புனித வெள்ளி, புனித சனி ஆகிய நாட்களில் கிறிஸ்தவர்கள் உணவையும், நீரையும் புறக்கணித்து முழுமையான நோன்பு கடைபிடித்ததாக சான்று பகர்கிறது. குழந்தைகள், முதியோர், கருவுற்றிருந்த பெண்கள் ஆகியோருக்கு நோன்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதாகவும் கூறுகிறார். கி.பி 325–ஆம் ஆண்டு நிசேயா நகரில் கூடிய திருஅவையின் முதல் பொதுச்சங்கம், கிறிஸ்து இயேசு 40 நாட்கள் நோன்பிருந்ததைந் சுட்டிக்காட்டி கிறிஸ்தவர்கள் அனைவரும் உயிர்ப்பு விழாவிற்க்கு முன்பு நாற்பது நாள்களை தயாரிப்புக் காலமாக ஏற்று நோன்பிருக்க வேண்டுமென வலியுறுத்தியது. பாவிகளைத் திரு அவையில் இருந்து விலக்கும் பழக்கம் பதினொன்றாம் நூற்றண்டில் கைவிடப்பட்டு தவக்காலத்தின் தொடக்கத்தில் சாம்பல் தெளிக்கும் சடங்கு மட்டும் தொடர்ந்து கி.பி 1091–ல் திருதந்தை இரண்டாம் உர்பான் கிறிஸ்தவர்கள் அனைவருமே தவக்காலதில் சாம்பல் பூசி தொடங்கும் வழக்கத்தை உருவாக்கினார். சாம்பலை புனிதப்படுத்தும் செபமும் அறிமுகமானது. ஆண்கள் தலையிலும் பெண்கள் நெற்றியிலும் திருநீறு பூசப்பட்டு தவக்கால நோன்பை தொடங்கினர்.

**குருத்து ஞாயிறு:**

கி.பி 395–ஆம் ஆண்டளவில் புனித வாரத்தின் முதல் நாளன்று ஒலிவ மலையில் இருந்து எருசலேம் நோக்கி கிறிஸ்தவர்கள் குருத்தோலை பவனி நடத்தியதாக “எத்தேரியா” என்ற ஒரு எருசலேம் திருப்பயணி குறிப்பு எழுதி வைத்துள்ளார். புனித வாரத்தின் முதல் நாள் குருத்து ஞாயிறு என்ற பெயர் ஸ்பெயின் நாட்டில் தோன்றியது. 8–ம் நூற்றாண்டின் பாதியில், குருத்தோலைப் பவனிக்கு முன்பு குருத்தோலைகளை மந்திரிக்கும் வழக்கம் உருவானது “பொபீயோ” நகரத்தின் பழங்காலத் திருப்பலி நூலில் அதற்கான செபங்களைக் காணமுடியும்.

**புனித வியாழன்:**

புனித வியாழனன்று திருத்தைல திருப்பலி நிகழ்த்தி, புனித எண்ணெய்களை மந்திரிக்கும் வழக்கமும் அதே நூற்றாண்டிலேயே உருவானதாக அறிகிறோம். ஒரு சில இடங்களில் மட்டும் நடைபெற்று வந்த பாதம் கழுவும் சடங்கை கி.பி 694–ஆம் ஆண்டு நடைபெற்ற “தொலேதோ” சங்கம் திருஅவை முழுவதற்கும் விரிவுப்படுத்தியது.

**புனித வெள்ளி :**

புனித வெள்ளியன்று இறைமக்கள் மன்றாட்டுக்குப் பிறகு திருப்பணியாளர் மட்டும் நற்கருணை உட்கொள்ளும் நடைமுறை இருந்தது. பத்தாம் நூற்றாண்டில் புனித வெள்ளியன்று இயேசுவின் திருவுருவத்தை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்யும் பக்தி தோன்றியது.

கத்தோலிக்கு திரு அவையின் மாபெரும் இறையியலாளரான புனித தாமஸ் அக்குவினாஸ், பாவத்திற்காக வருந்துகிற உள்ளத்தையும், தாழ்ச்சியையும் தவக்கால நோன்பு வழங்குகிறது, சிற்றின்ப ஆசையின் மோகங்களை சிதறடித்து உடல் இச்சையின் நெருப்பை அனைத்து கற்பின் உண்மை ஒளியை அது சுடர்விடச் செய்கிறது என்று கூறுகிறார். 1991 மார்ச் 29ஆம் தேதி புனித வெள்ளிக்கிழமை அன்று விவிலியம் சார்ந்த திருச்சிலுவைப்பாதை பக்தி முயற்சியை திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அறிமுகம் செய்து வைத்தார். ஒவ்வொரு ஆண்டும் தவக்காலத்தின் மேன்மைமிகு 40 நாட்களில் இயேசு பாலை நிலத்தில் நோன்பு இருந்த மறைபொருளோடு திரு அவை தன்னை இணைத்துக் கொள்கிறது என்று கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி (எண் 540) போதிக்கிறது. தவக்காலம் என்பது இயேசுவின் அருகாமையை அனுபவிப்பதற்கான ஆன்மீகப் போராட்டமாக உள்ளது. ஜெபம், இறை வார்த்தையை கேட்டல், தவம் செய்தல் ஆகிய விசுவாசத்தின் கருவிகளால் அதில் வெற்றி பெற வேண்டும் என்று முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக் அறிவுறுத்துகிறார்.

தவக்காலம் என்பது உடலை வருத்திக் கொள்கின்ற காலமன்று, உள்ளத்தை திருத்திக் கொள்ளும் காலம் என்பதை உணர நாம் அழைக்கப்படுகிறோம். நமது பாவ பழக்கங்களை களைந்து விட்டு புதிய மனிதராக மாறுவதற்கான வாய்ப்பை தவக்காலத்தின் வழியாக திரு

அவை நமக்கு வழங்குகிறது. தவக்கால ஒழுங்குகளையும், பக்தி முயற்சிகளையும் வாடிக்கையான ஒன்றாக கருதாமல் கடவுளுக்கும் நமக்கும் நடுவில் உள்ள இடைவெளியை குறைப்பதற்கான முயற்சிகளாக உணர்ந்து நாம் மனமாற்றம் பெற வேண்டும். தவக்காலம் என்பது தன் மறுப்புக்கு உகந்த காலம். நமது ஏழ்மையால் மற்றவருக்கு உதவவும் பிறரை மேம்படுத்தவும் நாம் எதை இழக்க முடியும் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். தவக்காலம் நம்மில் ஏற்படுத்துகின்ற மாற்றம் பிறரன்பில் வெளிப்பட வேண்டும் என்பதே நமது திருத்தந்தையின் அழைப்பு." தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவான் 15: 13) என்று கற்பித்த இயேசுவின் அன்பை நமது வாழ்வில் செயல்படுத்த இந்த தவக்காலம் அழைக்கிறது. தவக்காலத்தின் புனித நாட்கள் கடவுளுடனும், பிறருடனும் நமது உறவை சீரமைக்க உதவுபவையாக அமையட்டும்.

இயேசு தேர்ந்தெடுத்த வாழ்வின் வழி சிலுவை.....
இதயத்தின் ரத்த நாளத்தில்
இதமான தற்கையளிப்பு
இரக்கமாய் கசிந்தது...
சிற்பியே சிற்பமான சிறப்பு நிகழ்வு சிலுவைச் சாவு.....
தாய்மடியால் மாறிப்போன
தன்னிகரில்லா தலைவனின்
நெடிய வேதனை தியாகத்திற்கான விலை சுகமா? சுமையா? பேசப்பட்டது...
உயிர் கொடுத்தவன் தன் உயிருக்காய் போராடும் கோரநிலை முக்காலத்தையும்
மூன்று ஆணிகளால் முடக்கி வைத்த நிலை...
மனிதம் என்னும் வேரை தாங்கிப் பிடித்திட
துளிர் விட்டது சிலுவை மரம்....
நாளொன்று உன்னையும் என்னையும் மாற்றும் இதயத்தை விசாலமாக்கி இயேசுவின்
சீடத்திக்கள் ஆக்கும்... இதுவே தகுந்த காலம்.!!!

புனித சனி 13 முதல் 16ஆம் நூற்றாண்டுகள் வரை புனித சனிக்கிழமை பிற்பகலிலேயே உயிர்ப்பு பெருவிழா கொண்டாடப்படும் வழக்கம் இருந்தது.



**சகோ. விக்டோரியா, வ.பி.ச.**
திருவெற்றியூர்



# புனித யோசேப்பிடம் செல்வோம்

முன்னுரை:

எளிமைக்கு ஒரு சிறப்பு தினம் – இன்று
வளமைக்கு ஒரு வாழ்த்து தினம் ஆம்
எளிமையில் வளமாய் வாழ்ந்தவர் தான் நம் தந்தை வளன் – இவர்
உடன்படிக்கையால் முன் குறிக்கப்பட்டவர்
தாவீது குலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்
இறை அருளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்

**யூத கலாச்சாரத்தின் முன்னோடி:**

விண்ணும், மண்ணும் புகழ்பாடி நின்ற, உலகம் போற்றும் உன்னத அரசர் தாவீதின் வழி வந்தவர் தான் வளனார் என்னும் சூசை இவரது வாழ்வு விசித்திரமானது. இன்றைய உலகில் தன்னலம் தேடும் தலைவர்கள் மிக அதிகம் சுருங்க சொன்னால் கிளைகளே கனிகளை திருடும் காலமாய் மாறிவிட்டது. இதற்கெல்லாம் எதிர் சாட்சியாய் தன்னலம் தேடா பொறுப்பு மிக்க காவலராய் இறைவனின் பணியை செவ்வனே முடித்து வான்போற்றும் மலராய் லில்லி மலர்களை கையில் ஏந்தி நீதிமானாய் நம்முன் காட்சியளிக்கிறார். ஆனால் இன்று மனிதனைவிட சட்டத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அடிமைத்தனம் நிரம்பிய யூத சமுதாய சரித்திரத்தின் ஒரு குறிப்பிட்டத் திருப்பத்தில் இவர் பிறந்து வாழ்ந்து, சாதாரண காரியங்களில் அசாதாரமான சிறந்த குடும்பத் தலைவராக பொறுப்புடன் செயல்பட்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அன்னைமரியையும், இறைமகன் இயேசுவையும் பராமரித்து, பாருலகம் முழுவதும் இறைவனில் இணைய வித்திட்ட நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியர் தான் புனித சூசையப்பர். வாருங்கள் நாம் இவரிடம் செல்வோம்.

**அன்னை மரியின் அன்பர்:**

இந்த உலகில் ஒரு பெரிய அரசன் தன் மகளுக்கு கணவராகவும் வருங்கால இளவரசராகவும் நியமிக்கப்பட்ட இளைஞனை வளர்த்துவர மிகச் சிறந்த ஒரு நல்லவரை தேர்ந்தெடுப்பான். அதே போல அனைத்தும் அறிந்து இம்மூவுலகின் அரசராய் இருக்கிற இறைவன் தன் பாச மகளாகிய தூய கன்னிமரிக்கு கணவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் தான் புனித வளனார். கன்னிமரிக்கு கணவராக தகுதியும் நீதியும் உடையவர் புனித வளனார் மட்டுமே. தந்தையாகிய கடவுள் அனைத்து புனிதர்களையும் விட புனித வளனாரை மேன்மைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே தம் ஒரே அன்பு மகன் இயேசுவையும், அவருடைய அன்னையையும், தந்தை வளனாரின் பாதுகாப்பிலே ஒப்படைத்தார்.

இறைத்திட்டத்திற்க்கு கீழ்ப்படிந்தவராய் அன்னை மரிக்கு நல்ல துணைவராக திருகுடும்பத்திற்க்கு தலைவரானார். இறைவனின் கன்னி தாயாருக்கு கணவர் என்ற தகுதியோடு மட்டும் இருந்து வந்தார். தலைவராக வணங்கி அவர் சொற்படி கீழ்படிந்து

நடந்து வந்தார் புனித வளனார். 30 வருட காலமும் அன்னையோடு பயணித்து அளவற்ற பக்தி விசுவாசத்தோடு அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் அன்போடு நிறைவேற்றி கொடுத்து தம்முடைய கைதொழில் உழைப்பினால் சம்பாதித்து அவர்களை காப்பாற்றி வந்த உத்தமர் நம் வளனார் ஆவார்.

**அருள் நாதரின் தந்தை:**

இந்த உலகில் அவதரித்த இறைமைந்தர் இயேசு தந்தையின்றி அற்புதமாக உருவாகி பிறந்திருந்தாலும் புனித வளனார் தந்தைக்குரிய பாசத்தோடு அவரை வளர்த்து வந்தார் என்பதை நினைக்கையிலே மெய்சிலிர்க்கிறதது. புனித வளனார் தமது வாழ்நாள் முழுவதும் மிகுந்த அன்போடும் கவனத்தோடும் இயேசுவுக்கு எந்நேரமும் பணிவிடை செய்து வந்து புண்ணியத்தில் மேலோங்கி நின்றார். இறைவனின் திட்டத்திற்க்கு பணிந்ததால் வரலாற்று நாயகன் இயேசுவின் வளர்ப்பு தந்தையாகி வரலாறு படைத்தார்.

**வானம் இருண்டிருக்கும் போது நட்சத்திரங்கள் வெளிச்சமாக இருக்கும்**
**வாழ்வு இருண்டிருக்கும் போது நம்பிக்கைகள் வெளிச்சமாக இருக்கும்**

இதமாக இருக்கும் தருணங்களில் இனியவை செய்வது இலகுவானது, மாறாக இடித்து வரும் தருணங்களில் இனியவை செய்வது தான் சூப்பரானது. துணிந்து நில் தொடர்ந்து செல் தோல்வி கிடையாது என்ற உணர்வோடு இறைபராமரிப்பை நம்பிக்கை நட்சத்திரமாக கொண்டு நீதியை பாதையாக கண்டு பாலன் இயேசுவை காக்க பல்வேறு இன்னல்களை ஏற்று வாழ்ந்தவர்தான் நம் தந்தை புனித வளனார்.

**திருக்குடும்பத்தின் தலைவர்:**

ஒரு இல்லத்தின் வளர்ச்சியும், மகிழ்ச்சியும், தனிபெரும் முயற்சியும், தணியாத தாகமும், கடின உழைப்பும், உறுதியான நம்பிக்கையும், இலட்சிய தெளிவும் பெற்று இறைதிட்டம் இதுவென உணர்ந்து செயல்படுபவரே ஒரு சிறந்த தலைவர். இத்தகைய நற்பண்புகளை தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்கியவர் தான் நம் தந்தை புனித வளனார். திருக்குடும்பமே கடவுளது பெரிய குடும்பமான திருச்சபையின் தொடக்கம். கடவுள் இருபெரும் திரவியமாகிய தன் மகனையும் தன் அன்பு மகளையும் அவரிடம் ஒப்படைத்தார். எனவே தான் திருச்சபையும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**முடிவுரை:**

இவர் உழைப்பை பரிசுத்தமாகவும் உழைக்கின்றவர்களுக்கு பாதுகாவலராகவும் இருந்து வருகிறார். உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் இவர் நன்மை புரிகிறவராக விளங்குகிறார் அவரிடம் கேட்டதை அடையாமல் போனதில்லை என்று புனித அவிலா தெரசம்மாள் கூறுவது நாம் அறிந்த ஒன்றே எனவே தந்தையிடம் செல்வோம். அவர் அருளை நிரம்ப பெற்றுக்கொள்வோம்.



**Sr. V. Regina Mary**
St. Francis of Assisi Convent
Thuraiyur

# பெண்கள் தினவிழா கவிதை...

பெண் இறைவனின் படைப்புகளில் எல்லாம்
அழகானவள்...... மேலானவள்........ சிறந்தவள்.....
உலகிற்கு தாயாக..... தானமாக.......
இறைவன் கொடுத்த வரம் பெண்!....
பெண்ணின் வெற்றியும் தனித்தன்மையும் – அவளது
தன்னம்பிக்கையில் ஒளிந்துள்ளது.
எல்லாத்துறையிலும் துலங்குபவள் – பெண்
சிரத்தையும் சீரிய சிந்தனையும் கொண்டு
செயல்படுவதே பெண்ணின் சிறப்பாகும்.
பெண்மையே! எது சுதந்திரமென்று எண்ணிப்பார்!.....
நசுக்கிய காலமெல்லாம் நடுங்கியோடட்டும்.
ஏட்டளவில் இருந்ததெல்லாம் எழுந்தோடட்டும்
புரையோடிய பொய்மையெல்லாம் புரண்டோடட்டும்.
வீர பெண்ணே வீறுகொண்டு வெகுண்டெழு......
தொலைநோக்கு பார்வையோடு....... நம்பிக்கையோடு........
எழுந்திரு பெண்ணே எழுப்பி விட!........
(உ) என்னால் மடியும் என்று எதையும்
சாதிக்க...... சந்திக்க........ செயல்பட.........

அன்னை மரியின் அருளும் ஆசீரும் என்றும்....
எப்போதும்..... எங்கும்.... நிறைந்திட

அனைவருக்கும்
இனிய மகளிர் தினவிழா வாழ்த்துகள்.



சகோ. வேளாங்கண்ணி, வ.பி.ச.
ST. LORETTO CONVENT
TUNDLA

---

## திருதந்தை நலம் பெற செபம்



அன்பு தந்தையே இறைவா! உமது பேரருளால்
திருதந்தை பிரான்சிஸ் அவர்களின் அன்பான பணியை
நினைத்து நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகின்றோம்
அவரால் பலர் தங்களது வாழ்வில் நம்பிக்கை
பெற்றுள்ளனர் என்பதை நாங்கள் நினைத்து பார்கிறோம்.
இப்போது நோயுற்றிருக்கும் அவருக்கு சிகிச்சை
வழங்கும் மருத்துவக் குழவை வழிநடத்தவும்,
திருதந்தை அவர்கள் முழு உடல்நலம் பெறவும்
வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து
வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

– ஆமென்

# Happy Birthday Sisters

May the light of heaven shine
upon you and bring peace to your heart.
May the love of God be with you always and forever.

## MARCH

2025

1st Sr. Kala

3rd Sr. G. Maria Velankanni

4th Sr. Angeline Arockiasamy
Sr. Jeya Antony
Sr. Monita Digal

6th Sr. Allelluia Christanandhi

7th Sr. Emila Fernando

9th Sr. Marcia Maria
Sr. Sujatha Baliar Singh

10th Sr. Pauline Daisy
Sr. G. Stella Mary
Sr. Y. Amala Rani

11th Sr. Evangelin

12th Sr. Viyakula Mary
Sr. Gnana Marie
Sr. Melcy Mary
Sr. Daisy Jacob
Sr. Margaret Jecintha

14th Sr. Josephine Nirmala Rani
Sr. Josephine M.

15th Sr. Mary Cornelia
Sr. Margaret Gnana Muthu
Sr. Avila Theresa Mary
Sr. M. Maria Celine
Sr. V. Regina Mary
Sr. Beauty Digal

16th Sr. Florence Secily
Sr. Mary Stella .S
Sr. Princy

19th Sr. Bridget Mary

20th Sr. Mary Dennis
Sr. Arul Mary P.
Sr. Kalai Selvi

21st Sr. Roseline Jeya Rani

22nd Sr. Helen Paulinal

23rd Sr.  Maria Velankanni

25th Sr. Saleth Mary Rayappan
Sr. Priya Dharshini

26th Sr. Roseline .I

28th Rev. Mother. M. Arockiam
(Superior General)

29th Sr. Mary Joseline
Sr. Fathima Rathinam

30th Sr. Sophia Gasper

31st Sr. Arockia Mary Sobia

Be happy & Stay blessed



# Beloved Sisters...



# Departed in Christ....



| | |
|---|---|
| Sr. Mary Berchmans | 01.03.1951 |
| Sr. Mary Paula | 06.03.2016 |
| Sr. Mary Stanislaus (S.G.VI) | 10.03.1926 |
| Sr. Mary Clotilda | 12.03.2019 |
| Sr. Mary Anasthacia | 15.03.1985 |
| Sr. Mary Gertruda | 15.03.1995 |
| Sr. Mary Seraphia | 16.03.1991 |
| Sr. Mary Lucia | 22.03.1974 |
| Sr. Mary Leo | 23.03.2023 |
| Sr. Mary Divine Heart | 25.03.1984 |
| Sr. Mary Perpetua | 29.03.2003 |
| Sr. Mary Sebastin | 04.03.2024 |

*May their souls Rest in Peace*

# சமூக தொடர்பு பணிக்குழு

*வேண்டுகோள்!*



"**உறவே நீ பேசு**" என்ற மாத இதழ் வெற்றிகரமாக 70 இதழ்களை தந்திருக்கின்றது. உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றியும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து நம் சபையின் இந்த இதழ் சிறப்புற அமையவும், மேலும் பல செய்திகளைத் தாங்கிவர - மாநில வாரியாக ஒவ்வொரு பணிக்குழுவின் திட்டவரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அறிவிப்புக்கள், பாராட்டுகள், புத்தகம் மற்றும் பாடல் வெளியீடுகள், பணி ஓய்வு விழா, மாநிலத்தலைவிகளின் மாதாந்திரப் பயணத்திட்டங்கள் அடங்கிய தொகுப்புகள் இவற்றை ஒவ்வொரு மாதமும் 20-ம் தேதிக்குள் அனுப்பித்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மற்றும் முக்கியமான நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனுப்பும்போது JPEG Format-ல் அனுப்பவும்.

## தூய யோசேப்பின் பெருவிழா மற்றும் பெண்கள் தின நல்வாழ்த்துக்கள்

**குறிப்பு:**

*உங்கள் பகிர்வுகள் மற்றும் பணிக்குழுக்களின் செயல்பாடுகளை கீழ்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**Email: communicationfsj2022@gmail.com**



**Dr. Sr. Mary Jenova fsj**
*General Councilor*
*Communication Commission*

## RENOVATED SCHOOL BUILDING BLESSING - SRIVAIKUNTAM



## DINDIGUL ALVERNA HOUSE BLESSING



## PROVINCE COUNCIL MEETING



## TRICHY PROVINCE SUPERIORS MEETING



## UDAYENTHIRAM RENOVATED CONVENT BLESSING



## IHM TOILET BUILDING BLESSING, AVADI



## BON SECOURS GENERALATE BLESSING



## CONSECRATED DAY CELEBRATION - TNCRI



## சபை தலைமை அன்னையே!

# இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்



**“மகிழ்ந்து களிகூருங்கள்,
ஏனெனில், ஆண்டவர் பெரிய
காரியங்களைச் செய்தார்”**

(யோவேல் 2:21)

என்றும் அன்புடன்: ***FSJ Family***

